பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 21 திங்கட்கிழமை (05-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:40

# தீர்வை வழங்கும் அதிகார பலத்துடன் சிங்களத் தலைமை பேச்சுக்கு வரட்டும்!

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் வருடாந்த மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜனவரி5

**தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்கக்கூடிய முழு அதிகாரபலத்துடன் சிங்களத் தலைமை விரைவிலேயே பேச்சுக்கு முன்வரவேண்டும். - இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வருடாந்த மாநாடு ஏகமனதாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றது.**

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் நேற்றுக்காலை 3 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள காங்கிரஸ் இல்லத்தில் நடைபெற்றது.

அங்கு ஆறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு:-

★கடந்த ஐம்பது வருடங்களுக்கும மேலாக அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்படாது மறுக்கப்பட்ட ஈழம்வாழ தமிழ் மக்களாகிய நாம் சாத்வீக ரீதியிலும், ஜனநாயக ரீதியிலும் நடத்தி வந்த போராட்டம் வெற்றிதராத நிலை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் புதிய பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார்

### மகாசபைக் கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.5

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

கடந்த ஒருவருட காலமாக பொதுச்செயலாளராகப் பணிபுரிந்து வந்த ரி.மகேந்திரன் உப தலைவர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் மகாசபைக் கூட்டம் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் 3 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள கட்சி அலுவலகத்தில் தலைவர் அ.விநாயகமூர்த்தி எம்.பி. தலைமையில் நடைபெற்றது. அப்போதே இத்தெரிவுகள் இடம்பெற்றன.

கட்சியின் தலைவராகத் தொடர்ந்தும் அப்பாத்துரை விநாயகமூர்த்தியே தெரிவானார்.

தனக்கு வயது முதிர்ந்துவிட்ட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர் சங்கத் தலைவர் சட்டமா அதிபரைச் சந்திப்பார்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த தமிழக மீனவர் சங்கத் தலைவர் யு.அருளானந்தம் நேற்று இங்கிருந்து கொழும்பு பயணமானார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடித்த சமயம் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக சட்டமா அதி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருவடிநிலைக் கடலில் மாணவனைக் காணவில்லை!

### தீர்த்த உற்சவ தினத்தில் துயரச்சம்பவம்

வட்டுக்கோட்டை,ஜன.5

பொன்னாலை திருவடி நிலைக் கடலில் குளித்துக்கொண்டிருந்த பாடசாலை மாணவன் ஒருவன் அலைகளால் அடித்துச்செல்லப்பட்டு காணாமற்போயிருக்கிறான்.

பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவில் திருவெம்பாவை தீர்த்தத் திருவிழாவான நேற்று அங்கு இந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது.

சுவாமி கடலில் தீர்த்தமாடுவதற்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க அரசு குறித்து பிரதமர் இனி ஜனாதிபதியுடன் பேச்சில்லை!

நல்லிணக்க அரசு தொடக்கம் வேறு எந்தப் பிரச்சினை குறித்தும் பிரதமர், ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தமாட்டார். முக்கிய அமைச்சர்கள் சில தினங்களுக்கு முன்னர் கூடி பிரதமருக்கு இதற்கான அழுத்தம் கொடுத்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஜனாதிபதி தாம் பொறுப்பேற்ற

(16 ஆம் பக்கம் பார்க்க)



'சார்க்' மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றுகின்றார்.

## சமாதான முயற்சி முன்னேறிச் செல்வதைக் காண அரசும் பிரதமரும் நானும் உறுதி பூண்டிருக்கிறோம்!

### சார்க் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா உரை

இஸ்லாமாபாத்,ஜன.5

இன்று நாம் எதிர்நோக்கும் பல்வேறு தடைகளைத் தாண்டி, சமாதான முயற்சி முன்னேறிச் செல்வதைக் காண இலங்கை அரசும் பிரதம மந்திரியும் நானும் உறுதிகொண்டிருக்கிறோம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 'சார்க்' உச்சி மாநாட்டில் நேற்றுக் கூறினார்.

உச்சிமாநாட்டின் நேற்றைய ஆரம்பக்கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி குமாரதுங்க, துணிச்சலுடனும், தைரியத்துடனும் அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்து தீர்வுகாண்பதே பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான முக்கிய வழி எனவும் குறிப்பிட்டார்.

அவர் தனது நீண்ட உரையில், இலங்கைப் பிரச்சினை குறித்து மேலும் கூறியதாவது:-

இவ்வாறான ஒரு முயற்சியின் பலாபலன்களை நாம் இலங்கையில் காண ஆரம்பித்திருக்கின்றோம். இனப் பிரச்சினைக்கும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆயுத மோதலுக்கும் தீர்வு காண எனது அரசு 1994 ஆம் ஆண்டில் பேச்சு, சமரசம் ஆகிய வழிகள் மூலம் ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டது. இன்றைய அரசு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அந்த முயற்சிக்கு புத்துயிர் அளித்தது.

சமாதான முயற்சி சிக்கலானதாகும். நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு, தேசியப் பாதுகாப்பு ஆகிய கட்டமைப்புக்குள் இனப்பிரச்சினையின்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் கொலைகள்

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் நபர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் நேற்றிரவு சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஓட்டோவில் சென்று கொண்டிருந்த சமயம் இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறந்தவர் 26 வயது மதிக்கத்தக்கவர். சடலம் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை.

இறந்தவர் இராணுவச் சீருடையை ஒத்த துணியிலான உள்ளாடை அணிந்திருந்தார் என்று கூறப்பட்டது.

வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன் நேற்றிரவு 9.30 மணியளவில் சடலத்தைச் சென்று பார்வையிட்டார். அதனை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்து பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டார். *(நேற்றுக் காலை நடந்த மற்றுமொரு கொலை பற்றிய செய்தி 2 ஆம் பக்கத்தில்.)* (ஐ-164)




சில நிமிடங்களில் நீங்களும் ஸ்பீட் லோனை பெற்றுக்கொள்ளலாம். பிரதேசங்களுக்கு அருகிலுள்ள NSB கிளைக்கு விரையுங்கள்.

ஸ்பீட் லோனின் முக்கியத்துவம்: * வைப்புத் தொகையில் 90% வரை * ஆகக் குறைந்த வட்டி வீதம்.

ஸ்பீட் லோன் | NSB



அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நேற்றைய கூட்டத்தில் கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி, உபதலைவர் குமரகுருபரன் ஆகியோர் உரையாற்றுவதையும், கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# தமிழர் அபிலாஷைகள் நிறைவேறும்வரை கூட்டமைப்பின் உறுதி குலையக்கூடாது!

## காங்கிரஸ் மாநாட்டில் விநாயகமூர்த்தி வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஜன.5

தமிழர்களுடைய அபிலாஷைகள் அனைத்தும் நிறைவேறும் வரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கட்சிகள ஒற்றுமையுடன் உறுதியாக நின்று செயற்படவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸின தலைவரும் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய அப்பாததுரை விநாயகமூர்த்தி.

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ கட்சியின் வருடாந்த மாநாடு யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத்தெருவில் உள்ள காங்கிரஸ் இல்லத்தில் நேற்று நடைபெற்றது. அந்நிகழ்வுக்கு தலைமை வகித்து உரையாற்றியபோதே விநாயகமூர்த்தி எம்பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:-

தற்போதைய சூழ்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே பல்வேறு தில்லுமுல்லுகள் இடம்பெறுகின்றன. இருந்தபோதும் எந்தக் கொள்கையை முன்னிலைப்படுத்தி நாம் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளோமோ அது நிறைவேறும் வரை இணைந்து செயற்படுவோம்.

எமது கட்சியைச் சேர்ந்தவர்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பது விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் பட்சத்தில் அப்பதவிகளை உதறித் தள்ளுவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

ஈ.பி.டி.பி. போன்ற தமிழ் ஆயுதக் குழுக்கள் ஜனாதிபதியிடம் பெருந்தொகைப் பணத்தைக் கப்பமாகப் பெற்று விடுதலைப் புலிகளைக் காட்டிக் கொடுத்துவருவதோடு, அவர்களால் முன்னெடுக்கப்படும் உரிமைப்போராட்டத்தை நசுக்கும் வகையில் சர்வதேச மட்டங்களில் பிரச்சாரத்தையும் மேற்கொண்டு வருகின்றன.

தம்பி டக்ளஸ் தேவானந்தா மீண்டும் ஒரு தேர்தல் நடத்துமாறும் அதில் தாங்கள் 7 ஆசனங்களைப் பெரும்பான்மையாகப் பெற்று நாடாளுமன்றம் வருவோம் என்றும் ஜனாதிபதியிடம் கேட்டிருக்கிறார். அவருடைய இந்தப பகற்கனவு ஒருபோதும் பலிக்காது. தேர்தல் என்று வந்தால் எமது மக்கள் தகுந்த பாடம் ஒன்றினை அவர்களுக்கு புகட்டுவார்கள் என்பது உறுதி.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக தமிழர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த பேரினவாதக் கட்சிகள் அவர்களுக்கு வேண்டிய உரிமைகளைத் தரமறுத்ததோடு, தமிழ் இனத்தையே நசிக்கும் வகையிலே செயற்பட்டு வருகின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானத்தை எவ்வளவு காலத்திற்கு ஆதரிக்கின்றாரோ அதுவரை எமது கூட்டமைப்பின் ஆதரவு அவருக்கு கிடைக்கும்.

இந்திய மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் பலாலிவிமான நிலையத்தின் மீது தற்போது தமது பார்வையைத் திசை திரும்பியுள்ளன.

அதன் உள்நோக்கம் ஒருவருக்கும் புரியவில்லை.

தற்போது தென்னிலங்கையில் தலைதூக்கியுள்ள அரசியல் நெக்கடிகள முடிவடைந்து எந்த அரசு அதிக பலத்துடன் ஆட்சியமைக்கின்றதோ அவர்களுடன்தான் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வர்.

- இவ்வாறு விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ் .மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், கட்சியின் முக்கியஸ்தர்களான கலாநிதி குமரகுருபரன், சி.வ.கே.சிவஞானம் மற்றும் காங்கிரஸ் கடசியின் வன்னிமாவட்டத் தலைவர் கே.ஏ.செந்தில்நாதன் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ஐ-5-7-51-88)

# பெப்.22 ஆம் திகதிக்கு முன் ஜனாதிபதி பிரதமருடன் உடன்பாட்டுக்கு வரவேண்டும்

## அநுராதபுரத்தில் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.5

எதிர்வரும் பெப்ரவரிமாதம் 22 ஆம திகதிக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா பிரதமருடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும ஆரம்பிக்கக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் ஸ்ரீ மகாபோதி விகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட பூஜையில் கலந்து கொண்ட பின்னர், செய்தியாளாகள் மத்தியில் பேசியபோதே அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 22 ஆம் திகதியுடன் போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து இரண்டு வருடங்கள் பூர்த்தியடைவதால், அதற்கு மேலும் சமாதானப் பேச்சுக்களை இழுத்தடித்துச் செல்வது பொருத்தமல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே விரைவில் ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டு, சமாதான முயற்சிகள் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்பதற்காகவே இந்த விசேட பூசை நடத்தப்பட்டது.

(ஐ)

## வதிவிடப்பயிற்சி

வலிகாமம் தெற்கு, ஜன.5

வலிகாமம் கல்வி வலயத்தில் வாய் மொழி ஆங்கிலம் தொடர்பான பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கான ஆங்கிலப் பயிற்சிகள் இம்மாதம் வார இறுதி நாளகளில் வதிவிடப் பயிற்சியாக நடைபெறவுள்ளன.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் இப்பயிற்சியில் பங்குபற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சிக்காலம் பற்றி கடிதமூலம் அறிவிக்கப்படுமென வலிகாமம் வலய ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-8-152)

## பாடசாலை நாட்காட்டி

யாழ்ப்பாணம்,ஜன.5

ஆசிரியர்களுக்கான இந்தவருட பாடசாலை நாட்காட்டிகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

அவற்றை இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க யாழ்.மாவட்டச் செயலர் கே.குமரசாமியிடம் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் - சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-9)

# இடைக்கால அரசமைப்பு ஆலோசனைக்கு மு.கா.அரசியல் உயர்பீடம் அங்கீகாரம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இடைக்கால அரசமைப்பு ஆலோசனைக்கு அக்கட்சியின் அரசியல் உயர்பீடம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர் பீடம் நேற்றுமுன்தினம் இரவு கூடியது. தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சுமார் மூன்று மணி நேரம் அரசியல் பீட உறுப்பினர்களுக்கு இது தொடர்பாக விளக்கமளித்தார் என்று மு.கா.பொதுச்செயலர் ஹசன் அலி நேற்றுத் தெரிவித்தார்.

இடைக்கால அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டுமென்ற ஆலோசனை முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்குச் சமர்ப்பிக்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போதுள்ள அரசமைப்பில் இடமில்லை. இந்தநிலையில், புலிகளின் இடைக்காலக் கட்டமைப்பு ஆலோசனைகளைக் கூட நடைமுறையிலுள்ள அரசமைப்பின்கீழ் நடைமுறைப்படுத்த முடியாதென்று புலிகளே தெரிவித்துள்ளனர். எனவேதான், இடைக்கால அரசமைப்பைக் கொண்டுவரவேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் கோருகின்றதெனவும் ஹசன் அலி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் தயாரித்துள்ள மாற்று ஆலோசனைகள குறித்து எதிர்வரும் 9ஆம் திகதி வடக்கிலுள்ள முஸ்லிம் புத்திஜீவிகள், கல்விமான்கள், உலமாக்கள், யாழ். குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் அமைப்புகளின் பிரதி நிதிகள் ஆகியோருடன் விரிவான பேச்சு நடத்தப்படும். இதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் நூர்தீன்மசூர் ,ரிசாட் பதியுதீன் எம்பி. ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். இதே மாதிரியான சந்திப்புகள் கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிக்களுடனும் ஏனைய பகுதிகளிலுள்ள முஸ்லிம் முக்கியஸ்தர்களுடனும் பேச்சு நடத்தவும் முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் சொன்னார். (ஐ)

# செபமாலைத் தாசர் சபைக்கு புதிதாக இரு குருக்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.5

செபமாலை தாசர் சபைக்கு புதிதாக இரு குருக்கள் திருநிலைப்படுத்தப் படவுள்ளனர்.

வசாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தை சேர்ந்த செ.ஜோசவ் உதயகுமார், சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தை சேர்ந்த இஜோர்ச் அன்ரனி ஆகிய இருவருமே இவ்வாறு குருக்கள் பட்டத்தைப் பெறவுள்ளனர்.

இவர்கள் இருவரிற்கும்குருப்பட்டம வழங்கும் நிகழ்வு இன்று திங்கட கிழமை யாழ்மரியன்னை பேராலயத்தில் நடைபெறும்.

செ.ஜோசவ் உதயகுமார் எதிர் வரும் 10ஆம்- திகதி சனிக்கிழமை பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்திலும், இ.ஜோர்ச் அன்ரனி நாளைமறுதினம் புதன்கிழமை சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்திலும் முதல் திருப்பலியை நிறைவேற்றுவர். (எ-7)

# வவுனியாவில் நேற்றுக் காலை இளைஞர் சுட்டுக் கொலை!

வவுனியா, ஜன.5

வவுனியாவில்இளைஞா ஒருவா நேற்றுக் காலை இனந்தெரியாதோரால சுட்டுக்கொல்லப்பட்டார்.

வவுனியா கட்டைக்காடு என்னும் இடத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அளவெட்டி தெற்கைச் சேர்ந்த பலகைப்பிரமணியம் அஜந்தன் (வயது - 25) என்ற நபரே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

ஆலயம் ஒன்றில் நடைபெற்ற பூஜை வழிபாட்டில் பங்குபற்றிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்தோர துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

இறந்தவரின் சடலத்தை மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி வவுனியா பொலீஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி இன்பெக்ஸ்டர் டி.எம். விஜயரத்னா தலைமையிலான குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

(ஐ-ரீ-9-164)

# தீர்வை வழங்கும் அதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில், ஆயுதம் தாங்கிய தனிநாட்டுப் போராட்டமாக எமது இனம் தனது போராட்ட வடிவத்தை மாற்றிக்கொண்டது. இதனால் ஏற்பட்ட அழிவுகளும், துயரங்களும் ஏற்படுத்திய தாக்கங்களை அனுபவித்தவர்கள் தமிழர்கள் தான் என்றாலும், நாட்டின் மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டவர்கள் தான் என்பதை மறுக்கமுடியாது. இந்த அழிவுகளும் துயரங்களும் இனியும் தொடராத வகையில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிபுகளை அடிப்படையாகக்கொண்டு, தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுக்களை தென்னிலங்கை அரசும் அதிகார சக்திகளும் முன்னெடுக்க தொடர்ந்தும் தாமதம் காட்டினால், நாம, நமது சுயநிர்ணய உரிமையினைப் பிரயோகித்து பிரிந்துசெல்வது தவிர்க்க முடியாததாகும். எனவே, இந்நிலைமையைத் தவிர்ப்பதற்கு தீர்வு வழங்கக் கூடிய அதிகார பலத்துடன் சிங்களத் தலைமை தாமதமின்றி முன்வரவேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது.

★தத்தமது வீடுகளில் குடியிருக்கும உரிமை மறுக்கப்பட்டிருக்கும் எமது தாயக மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் சென்றுவாழ்வதற்கு போடப்பட்டுள்ள தடைகளை உடனடியாக நீக்கவேண்டுமென இச்சபை கோருகின்றது.

★எமது கடற்றொழிலாளர்கள் தமது கடற்பிரதேசங்களில் எதுவித தடையுமின்றி தொழில் புரிவதற்கும், தமது வாழ்வாதார மேம்பாடுகளை மேற்கொள்வதற்கும் போடப்பட்டுள்ள தடைகளை உடனடியாக நீக்கவேண்டுமென இசசபை தீர்மானம் நிறைவேற்றுகிறது.

★சர்வதேச சட்டங்களுக்கு மாறாக-பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ-அநீதியானமுறையில் கைதுசெய்யப்பட்டு எதுவித நீதிமன்ற விசாரணைகளுமின்றி மனித சுதந்திரமும் உரிமையும் மறுக்கப்பட்டு பலவருடங்களாகச் சிறையில் வாடும் ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழ் மக்களை உடனடியாக விடுதலைசெய்யுமாறு இச்சபை கோருகிறது.

★எமது உறவினர்கள் தேடியலைந்து கொண்டிருக்கும் காணாமற்போய்விட்ட தமது உறவுகள் தொடர்பான உண்மைநிலையினை ஒளிவுமறைவில்லாது தெரியப்படுத்தவேண்டும் என்றும், மனித உரிமை ஆணைக்குழுவினது விசாரணைக்குழு அறிக்கையில் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதிய நஷ்டஈடு, நிவாரணம் வழங்கவேண்டும் என்றும் இச்சபை அரசினைக் கோருகின்றது.

★எமது கட்சியின் இன்றைய வளர்ச்சி நிலை மற்றும் இன்று நிலவும் தேசிய அரசியல் சூழல் என்பவற்றுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் எமது கட்சியின் யாப்பினைத் திருத்தி அமைக்கவேண்டும் என்று இச்சபை கருதுவதால் அதுபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க பின்வருவோரைக்கொண்ட ஒரு குழுவை நியமிப்பதென இச்சபை தீர்மானிக்கின்றது.

ஜீ.ஜீ.பொன்னம்பலம், அ.விநாயகமூர்த்தி, சி.வீ.கே.சிவஞானம், கு.மு.தர்மராசா, கலாநிதி ந.குமரகுருபரன்.

(ஐ-7-51-5)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# பிரிட்டிஷ் பிரதமர் பிளயர் ஈராக்கிற்கு திடீர் விஜயம்!

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் நேற்று ஈராக்கிற்கு திடீர் விஜயம் மேற்கொண்டார். அவரது விஜயத்தை முன்னிட்டு ஏற்கனவே அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்த போதும் அவரது விஜயம் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது.

ஈராக் போரில் பங்குபற்றியதற்காக தனது நாட்டுப் படையினருக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலேயே அவரது இந்த விஜயம் இருந்தது. இதற்கு முன்னரும் ஒரு தடவை ஈராக்கிற்கு விஜயம் செய்த பிளயர், அங்குள்ள தனது நாட்டுப் படையினருக்கு நன்றி தெரிவித்திருந்தார்.

இராணுவ விமானத்தில் பயணித்த பிளயர், பஸ்ராவிலுள்ள பிரிட்டிஷ் படையினரின் தலைமையகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் தரையிறங்கினார்.

அங்குள்ள படைத் தலைமையகத்தில் படையினரைச் சந்தித்த அவர், போரில் பங்குபற்றியதற்காக படையினருக்கு நன்றி தெரிவித்தார்.

ஈராக்கிய இடைக்கால ஆட்சிக குழு உறுப்பினர்கள் சிலரையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

முன்னதாக எகிப்தில் அந்நாட்டு பிரதமர் ஹொஸ்னி முபாரக்கை சந்தித்த பிரதமர் பிளயர், திடீரென ஈராக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டார் என்று பிரிட்டிஷ் அரசு நேற்று மாலை தெரிவித்தது. நேற்று மாலையே அவர் ஈராக்கிலிருந்து பிரிட்டனுக்கு திரும்புவார் என்றும் அது தெரிவித்திருந்திருந்தது.

(ஒ)

## 'ஸ்பிரிட்' ஆய்வுக் கலம் செவ்வாயில் தரையிறங்கியது




செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக நாஸாவினால் அனுப்பப்பட்ட ஸ்பிரிட் (Sprite) ஆய்வுக் கலம் நேற்று வெற்றிகரமாக செவ்வாயில் தரையிறங்கியது.

தரையிறங்கிய உடனேயே அது பூமிக்கு செவ்வாயின் தரைத்தோற் றத்தின் புகைப்படங்களையும் எடுத்து அனுப்பியது. ஜி.எம்.ரி. நேரப்படி 4.35 மணிய ளவில் அது செவ்வாயில் தரையிறங்கியதற்கான சமிக்கையை நாஸா மையத்தின் கணனிகள் காட்டின.

கடந்த ஜூன்மாதம் ஸ்பிரிட் ஆய் வுககலம் செயற்கைக்கோளின் உதவியுடன் விண்வெளிக்கு ஏவப்பட்டது. பிரதான செயற்கை கோளிலிருந்து கடந்த இரண்டு வாரங்களுககு முன்னர் பிரிந்த இந்த ஆய்வுக்கலம் செவ்வாயில் தரையிறங்கியமை நாஸாவிற்கு கிடைத்த மற்றொரு வெற்றி என்று கூறப்படுகிறது. தரையிறங்கிய ஆய்வுக்கலம் தனது பணிகளை உடனேயே மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறது. செவ்வாய் தரைத்தோற்ற வடிவங்களை அது படம்பிடித்து பூமிக்கு அனுப்பிவருகிறது.

இதேசமயம், நாஸா ஆய்வு மையத்திற்கு சவால் விடும் வகையில் ஈஸா ஆய்வு மையம் பீகிள் ஆய்வுக் கலத்தை அனுப்பியிருந்தது. ஆனால், அது செவ்வாயின் தரையை தொடுமுன்னரே மாயமாகியமை அந்த மையத்தின் விஞ்ஞானிகளை ஏமாற்றத்தற்குத் தள்ளியது. அதனுடனான தொடர்புகள் இன்னமும் கிடைக்கவில்லை.

## ஆப்கானிஸ்தானின் அரசமைப்புச் சட்டம் உருவானது

ஆப்கானிஸ்தானின் புதிய அரசமைப்புச் சட்டத்தை லோயா ஜிகாத் எனப்படும் மகாசபை நேற்று அங்கீகரித்தது. ஆப்கானில் செல்வாக்கு மிக்க அதிகார சபை லோயாஜிகாத் இனக் குழுக்களின் சுமார் 500 தலைவர்கள் இதில் அங்கம் வகிக்கின்றனர். ஆப்கானிஸ்தானின் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காகக் கடந்த மூன்று வாரங்களாக இவர்கள் கூடிப் பேசினர். புதிய அரசமைப்புச்சட்டம் குறித்து கடும் விவாதங்களும் இடம்பெற்றன. அரசமைப்புச் சட்டமொன்றை உருவாக்க நேற்று வரை காலக்கெடு வகுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், புதிய அரசமைப்புச் சட்டம் நேற்று இறுதி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதாக ஆப்கான் அதிகாரிகள் அறிவித்தனர்.(ஒ)

## பிலிப்பைன்ஸில் குண்டு வெடிப்பு: 10 பேர் பலி!

பிலிப்பைன்ஸில் கூடைப்பந்தாட்டப் போட்டி ஒன்றின் போது குண்டு வெடித்தது. இதில் 10 பேர் கொல்லப்பட்டனா; 40 பேர் காயமடைந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிறிஸ்வரான நகர முதல்வர் விவன்ஜியோ பட்டாகாவை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலில் பட்டாகா காயமடைந்தார். கடந்தவருடம் இவரைக் குறிவைத்து நடத்தப்பட்ட மூன்று தாக்குதல்களில் இவர் உயிர் தப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## பிரிட்னி ஸ்பியர்ஸ் திடீர் திருமணம்

பொப் இசைப்பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ் நேற்று திடீரென்று திருமணம் செய்துகொண்டார். 22 வயதுடைய இவர், தனது சிறுவயதுத்தோழன் அலெக்ஸான்டரைத்(வயது22) திருமணம் செய்துகொண்டார் என்று பிரிட்னியின் செயலாளர் தெரிவித்தார். அமெரிக்காவில் இவர்களது திருமணம் நடைபெற்றது.

# 10ஆயிரம் படையினர் சூழ 'சார்க்' உச்சி மாநாடு ஆரம்பம்

இஸ்லாமாபாத்,ஜன.5

சார்க் நாடுகளின் மூன்று நாள் உச்சி மாநாடு நேற்று இஸ்லாமாபாத்தில் ஆரம்பமானது. பாகிஸ்தான் பிரதமர் ஸப்பருல்லாகான் ஜமாலி மாநாட்டில் ஆரம்ப உரையாற்றினார். சார்க் பிராந்தியத்தில் கூடுதலான பொருளாதார ஒத்துழைப்புக்காக அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

தலைநகரிலுள்ள ஜின்னா மாநாட்டு நிலையத்தில் இந்தியா, பாகிஸ்தான் பங்களாதேஷ் இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய சார்க் நாடுகளின் தலைவர்கள் கூடியிருக்க அப்பிரதேசம் முழுவதையும் 10ஆயிரம் பொலீஸாரும் கொமாண்டோ படையினரும் சுற்றிவளைத்திருந்தனர். உச்சிமாநாட்டு நிலையத்தைச் சுற்றிவரவுள்ள பகுதியில் அனைத்துக் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன.

பாகிஸ்தான் பிரதமர் ஜமாலியும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் ஒருவர் பக்கத்தில் ஒருவராக மாநாட்டு மண்டபத்தில் பிரவேசித்து ஒன்றாகவே ஆசனங்களில் அமர்ந்தனர்.

அடுத்த சார்க் உச்சி மாநாடு 2005ஆம் ஆண்டு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறுமென பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷித் முகமது கிரி இஸ்லாமாபாத்தில் தெரிவித்தார்.

தெற்காசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் சார்க் உறுப்பு நாடுகளின் ஒப்புதல் பெற்றபிறகு வரும் 2006ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்றும் அவர் கூறினார்.

## முதலைக்கு அருகே குழந்தை: சாகச வீரருக்குக் கண்டனம்!



முதலை-இர்வீன்-குழந்தை

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் இர்வின் ஸ்ரீபன் இவர் சொந்தமாக ஓர் உயிரியல் பூங்கா நடத்தி வருகிறார். இந்தப் பூங்காவில் முதலைகள், மலைப் பாம்புகள் மற்றும் கொடிய விலங்கினங்களை இவர் வளர்த்து வருகிறார். பூங்காவுக்கு வரும் வாடிக்கையாளர்களுக்காக மயிர் கூச்செறிய வைக்கும் சாகச நிகழ்ச்சிகளையும் இவர் செய்து காட்டுகிறார்.

இந்த சாகச நிகழ்ச்சியில் ஒரு பகுதியாக தனது ஒருமாதக் குழந்தையை கையில் தூக்கி வைத்துக்கொண்டு, முதலைக்கு இறைச்சித் துண்டுகளை போட்டார் இர்வின். குழந்தையை முதலையின் வாய்க்கு அருகே கொண்டு போய் பார்வையாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தினார்.

முதலை குழந்தையை விழுங்க வரும்போது குழந்தையை விலக்கிக் கொண்டார். இந்த ஆபத்தான விளையாட்டு பார்ப்பவர்களை அதிர்ச்சியில் உறைய வைத்தது. இது குழந்தைகளின் உரிமையை மீறும் செயல் என்று சில சேவை நிறுவனங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதைத் தொடர்ந்து இவரை விசாரிக்க பொலீஸார் முடிவு செய்துள்ளனர். விசாரணைக்குப் பிறகு இவர் மீது வழக்குத் தொடரப்படும் என்று பொலீஸார் கூறுகின்றனர்.

# இந்திய நாடாளுமன்றத் தேர்தல்: தமிழகத்தில் மும்முனைப்போட்டி?

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மேமாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறும் பாரதீய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல் பற்றி முடிவு எடுக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான அறிகுறி ஏற்பட்டு உள்ளதால் அனைத்துக் கட்சிகளும் கூட்டணி அமைக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளன. கடந்த தேர்தலில் கூட்டணி அமைத்திருந்த கட்சிகள் இந்தத் தேர்தலுக்கு இடம்மாறுகின்றன. பா.ஜ.க கூட்டணியில் இருந்த தி.மு.க., ம.தி.மு.க. கட்சிகள் இப்போது விலகிவிட்டன. தேசிய அளவில் பருக் அப்துல்லா கட்சி, ராம் விலாஸ் பாஸ்வான் கட்சி, அஜித் சிங் கட்சி ஆகியவையும் பா.ஜ.க. கூட்டணியை விட்டு விலகிவிட்டன.

மத்தியில் ஆட்சியை பிடித்தே தீருவது என்ற எண்ணத்தில் காங்கிரஸ் புதிய வியூகங்களை வகுத்து வருகிறது. காங்கிரஸ் தலைவர் சோனியா கூட்டணி என்ற புதிய கோஷத்தை எழுப்பியுள்ளார். இதற்காக தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள், பகுஜன் கட்சி, சமாஜ்வாடி கட் சி, தேசியவாதக் காங்கிரஸ் ஆகியவற்றை காங்கிரஸ் கூட்டணியில் சேர்க்க முயன்று வருகிறார்.

இதற்காக தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் கட்சித் தலைவர்களுடன் சோனியா காந்தி பேச்சு நடத்தி உள்ளார்.

பாரதீய ஜனதாவும் கூட்டணிகளை சேர்ப்பதில் தீவிரமாக இறங்கிவிட்டது.

தெலுங்குதேசம், சிவசேனா, பிஜு ஜனதா தளம், திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பா.ஜனதா கூட்டணியில் மீண்டும் இடம்பெறுகின்றன. அ.தி.மு.க. இந்த கூட்டணியில் சேரக் கூடும்.

தமிழகத்தில் அ.தி.மு.க. தலைமையில் ஓர் அணியும் தி.மு.க. தலைமையில் ஓர் அணியும் உருவாகிறது. கடந்த முறை அ.தி.மு.க. கூட்டணியில் இருந்த காங்கிரஸ், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், முஸ்லிம் லீக் ஆகியவை இந்தத் தேர்தலில் இடம்மாறி தி.மு.க. கூட்டணிக்கு வருகின்றன.

தி.மு.க. கூட்டணியில் இருந்த பா.ஜனதா தனித்து விடப்பட்டுள்ளது. பா.ம.க. முடிவு எதுவும் அறிவிக்காமல் இருக்கிறது.

பா.ஜனதாவும், பா.ம.க., அ.தி.மு.க. கூட்டணியில் சேரும் வாய்ப்பு உள்ளது. அப்படி ஒரு நிலை உருவானால் தமிழ்நாட்டில் தி.மு.க. - அ.தி.மு.க. ஆகிய 2 கூட்டணிகள் ஏற்படும்.

அ.தி.மு.க. - பாரதிய ஜனதா கூட்டணி ஏற்படாமல்போனால் 3ஆவது அணி உருவாக வாய்ப்பு உள்ளது.

(ஒ)

## மதில்மேல் பூனையாக பா.ம.க.

எதிர்வரும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பத்துத் தொகுதிகளை ஒதுக்கும் கட்சியுடன் தான் கூட்டணி என்றும் கூறும் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸை வளைத்துக்கொள்ளப்போவது ஜெயலலிதாவா, கருணாநிதியா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மதில் மேல் பூனையாக உள்ள பா.ம.க. எந்தப் பக்கம் சாயப்போகிறது என்பது இது வரை தெளிவாகவில்லை.

இவ்விரு கட்சிகளுடனுமே கடந்த காலங்களில் கசப்பான அனுபவத்தைப் பெற்றிருந்தாலும், சமீப காலம் வரை அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிராகவும், தி.மு.கவுடன் நெருக்கமாகவும் செயற்பட்டுவந்தார் டாக்டர் ராமதாஸ்.

இறுதி வரை முடிவை இரகசியமாக வைத்திருந்து, அதிர்ச்சி வைத்தியம் அளிப்பவரான ராமதாஸின் தற்போதைய அறிவிப்பு, அதிக தொகுதிகளைக் கைப்பற்றாமல் டில்லி செல்வதில் பயனில்லை என்ற அனுவத்தில் கிடைத்த பாடமாகவே தெரிகிறது.

வாஜ்பாய் ஆட்சியா, சோனியா ஆட்சியா, ஜெயலலிதா அணியா, கருணாநிதி அணியா என்பதையெல்லாம் பொருட்படுத்தப்போதில்லை. தங்களுக்குத் தேவை அதிக தொகுதி என்பதை பகிரங்கப்படுத்தி இருக்கிறது. பா.ம.க.

(ஒ)

## 33 தொகுதிகளில் அ.தி.மு.க. போட்டியாம்

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் மொத்தம் 33 தொகுதிகளில் அ.தி.மு.க. போட்டியிடும் என்று தமிழக முதல்வரும் அக்கட்சியின் பொதுச்செயலாளருமான ஜெயலலிதா கூறியுள்ளார்.

சென்னையில் அ.தி.மு.க. நிர்வாகிகள் தேர்வு நடைபெறும் கூட்டத்தில் அவர் கூறியதாவது:-

அ.தி.மு.க. தனித்து நின்றாலும் பெரும்வெற்றி பெறும் நிலையிலுள்ளது. நம்முடன் கூட்டணி வைத்துக்கொள்ள மற்றக் கட்சிகள் பெரிதும் விரும்புகின்றன. காரணம் கூட்டணி சேருபவர்களுக்கு நிச்சயம் பயன் உண்டு.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளில் குறைந்த பட்சம் 33 தொகுதிகளில் அ.தி.மு.க. போட்டியிடவேண்டும். 6 தொகுதிகளை கூட்டணிக் கட்சியினருக்குத் தரலாம்.

அப்படிக் கூட்டணி ஏற்படாவிட்டால் 39 தொகுதிகளிலும் நாமே போட்டி யிட்டு வெல்வோம். இவ்வாறு அவர் கூறினார்.

(ஒ)

## 11ஆம் திகதி பா.ஜ.க.முடிவு

அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைப்பது குறித்து ஹைதராபாதில் எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெறும் பா.ஜ.க. தேசிய செயற்குழுக கூட்டத்தில் இறுதிமுடிவு எடுக்கப்படும் என்று அக்கட்சியின் அகில இந்தியத் தலைவர் எம்.வெங்கைய நாயுடு தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக கூட்டணிக்கு அ.தி.மு.க. தலைமையேற்க வேண்டும் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன கூறியிருக்கிறார்.

வாஜ்பேயின் தலைமையை ஏற்கக்கூடிய எந்தக் கட்சிக்கும் பா.ஜ.கவின் கதவுகள் திறந்தே இருக்கின்றன என்றும் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் வெங்கைய நாயுடு கூறினார்.

(ஒ)

## அ.தி.மு.க. - முஸ்லிம் லீக் பிரிவு!

அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இருந்து இந்திய முஸ்லிம் லீக் விலகியது.

அக் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலர் இ.அஹமது எம்.பி., சென்னையில் தி.மு.க தலைவர் கருணாநிதியை நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகி, தி.மு.க. தலைமையிலான அணியில் சேர்ந்துள்ளோம்.

கருணாநிதியுடன் நடத்தியபேச்சு திருப்திகரமாக இருந்தது. தி.மு.கவுடன ஏற்பட்டுள்ள இந்த உறவு மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்துத்துவக் கட்சியான பா.ஜ.க. தலைமையில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. சேர்ந்ததால் நாங்கள் விலகினோம். எப்போது தேசிய ஜனநாயகக் கூட்ட ணியில் இருந்து தி.மு.க. விலகியதோ, அப்போதே தி.மு.க. அணியில் நாங்கள் சேர்ந்துவிட்டோம் என்றார் அவர்.

(ஒ)

# பருத்தித்துறை நகராட்சி மன்றம் அறிவித்தல்கள்

ஆதனவரி அறிவித்தல் - 2004

ஆதன மதிப்பீட்டிற்கமைவாக 2003 ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்த ஆதனவரித்தொகைகளே 2004 ஆம் ஆண்டிற்கும் அவ்வாதனங்களுக்குச் செலுத்தற்பாலது என வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது. இவற்றிற்குரிய அறிவித்தல்கள் தனித்தனியாக வரியிறுப்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாதன வரித்தொகைகள் 2004 ஆம் ஆண்டு மார்ச் 31, ஜுன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 ஆகிய திகதிகளில் முடிவுறும் காலாண்டுக்கு ஒரு தடவை செலுத்தப்பட வேண்டும். இவை ஆண்டுத் தொடக்கத்தில் முழுமையாகவும் செலுத்தப்படலாம். 2004 ஜனவரி மாதத்திற்கு முன்னர் ஆண்டின் முழு ஆதன வரியையும் செலுத்தினால் 10% வரிக்கழிவும் ஒரு காலாண்டிற்குரிய வரியை அக்காலாண்டின் முதலாம் மாதத்திலும் செலுத்தினால் 5% வரிக்கழிவும் வழங்கப்படும்.

காலாண்டு முடிவுறும் திகதிக்குப்பின்னர் செலுத்தப்படும் ஆதனவரித் தொகைக்கு பற்றாணைச் செலவு (தண்டம்) அறவிடப்படும். அப்பற்றாணைச் செலவு வெற்றுக்காணிகளுக்கும் குடியிருக்கும் ஆதனங்களுக்கும் 15% ஆகவும் ஏனைய ஆதனங்களுக்கு 20% ஆகவும் அறவிடப்படும்.

இவ்வரிமதிப்பிற்கு ஆட்சேபனை ஏதுமிருப்பின் இவ்வறிவித்தல் கொடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் மன்ற அலுவலகத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும். உரிய காலங்களில் அக்காலப் பகுதிகளிற்குரிய ஆதனவரி செலுத்தாவிட்டால் குடியிருப்பாளரின் பொருள்கள் நடுக்கட்டல் செய்யப்படும் என்பதை குடியிருப்பாளர்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றேன்.

கட்டட அமைப்பு வேலைகளுக்கான அனுமதி

பருத்தித்துறை நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட அரச, தனியார் கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள் என்பன அமைக்கப்படும் போது அல்லது புதுப்பிக்கப்படும் போது மன்றத்தின் முன்னனுமதி பெறவேண்டும். அனுமதி பெறுவதற்கு மன்றத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து சமர்ப்பித்து அனுமதியளிக்கப்பட்ட பின்னரே கட்டட வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

நகராட்சி மன்றத்தின் அனுமதி பெறாது அமைக்கப்படும் சகல கட்டடங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

சூழல் பாதுகாப்பு உரிமம்

சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக, 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி 1159/22 ஆம இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 'ஆ' பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை எமது மன்ற எல்லைக்குள் மேற்கொள்கின்றவர்கள் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளவேண்டும். மேற்படி தொழிலை/வியாபாரத்தை நடத்துபவர்கள் எமது அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்திசெய்து சமர்ப்பித்து இவ்வுரிமத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வுரிமம் பெறாது மேற்படி தொழில்கள் / வியாபாரம் நடத்த அனுமதிக்கப்பட மாட்டாது என்பதுடன் அத்தகையவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

வியாபார உரிமம் 2004

எமது மன்ற எல்லைக்குட்பட்ட சகல வியாபார / தொழில் நிலையங்களும் தங்கள் வியாபாரத்திற்கான உரிமம் கோரும் விண்ணப்பப்பத்திரத்தை எமது மன்றத்தில் பெற்று 31.01.2004 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்து சமர்ப்பித்து உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். 31.03.2004 ஆம் திகதிக்குள் உரிமத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

வாகனங்கள், மிருகங்களுக்கான உரிமம் 2004

இந்நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்டோர் தமது வளர்ப்பு நாய்களுக்கும் துவிச்சக்கரவண்டிகளுக்கும் 2004 ஆம் ஆண்டிற்குரிய உரிமத்தை 31.03.2004 ஆம் திகதிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் வந்து கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு அறியத்தரப்படுகின்றது.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
31.12.2003

திருமதி க.திருச்செல்வநாயகம்
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

(சி-32468)(25-11-18-24)


## புதிய பிரிவுகள்

எமது நிறுவனத்தில் கீழ்வரும் கற்கைநெறிகளிற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.



**Dip in MS Office**
**Dip in Desktop Publishing**
**Internet @ email**
**Quick Book 2000 Pro**
(பல்கலைக்கழக மாணவர்களுக்கானது)
**AutoCAD Drawing**

ஆரம்பம்: 10-01-2004 சனி காலை 10.00

மேலதிக விபரங்களிற்கு

STP Your Partner in IT Solution T.P:2222674
73, Palaly Road, Kantharmadam. Branch: Chavakachcheri


## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகநாதசர்மா இர்த்தினேஸ்வரி

சுழிபுரம், பறாளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதசர்மா இரத்தினேஸ்வரி அவர்கள் 03.01.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகநாதசர்மா (சிவானந்தம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராஜ ஐயர் - சொர்ணம்மா தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற முத்துச்சாமி ஐயர் - இராசலட்சுமி தம்பதிகளின் மருமகளும் சிவகுமார் (பிரான்ஸ்), கோமதி (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரஜனி, பாஸ்கரசர்மா ஆகியோரின் மாமியாரும் சாயினி, சநாதனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2004) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*212, பிக்கறிங்ஸ் வீதி,*
*கொழும்பு - 13,*
T.P.No: 0112470313

தகவல்:
மு. பாலகுருசாமிசர்மா
*(மைத்துனர்)*
பறாளாய், சுழிபுரம்.

(சி-32485) (26-11-18-24)

## இருபாலையில் பொதுமண்டபம்

வலி.கிழக்கு,ஜன.5

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இருபாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 'நியாப்' அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் பொது மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந்த மண்டபத்தின் கட்டட வேலைகளை இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-180)

## நுளம்பு வலைகளுக்கு மருந்து தெளிப்பு

வட்டுக்கோட்டை பொதுசுகாதாரப் பரிசோதகர் பிரிவில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை வட்டுக்கோட்டை, மாவடி மத்திய மருந்தகத்தில் நுளம்புவலைகளுக்கு மருந்துதெளிப்பு நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் தங்களிடமுள்ள நுளம்புவலைகளைக் கொண்டுவந்து மருந்து தெளித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## உதவிப்பணம் பெறுவோர் விவரம் இன்று மீளாய்வு

குருநகர், ஜன.5

குருநகர்ப் பகுதியில் மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் விவரங்கள் இன்று இப்பகுதிக் கிராம உத்தியோகத்தரால் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

ஜே/67, ஜே/68, ஜே/69 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மாதாந்த உதவிப் பணத்தைப்பெற்று வருபவர்கள் இன்று காலை 9மணி தொடக்கம் குருநகர் சென்.றோக்ஸ் சனசமூக நிலையத்தில் நடைபெறும். மீளாய்வு நடவடிக்கையில் கலந்துகொண்டு தமது விவரங்களை மீள்பதிவு செய்துகொள்ளுமாறு கிராம உத்தியோகத்தர் செ.யூலன் அறிவித்துள்ளார்.

மீளாய்வின்போது சமுகம் கொடுக்காதவர்களுக்கு மாதாந்த உதவிப் பணம் பெறுவதற்கு தம்மால் சிபார்சு செய்யப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-51)

## பாடசாலைக்கு புதிய ஆய்வு கூடம்

சாவகச்சேரி,ஜன.5

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த ஆய்வுகூடம் அமெரிக்க அரசின் உதவித் திட்டத்தின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த ஆய்வுகூடத்துக்கான அடிக்கல் நடும் விழா கடந்த மாதம் 27 ஆம் திகதி பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. (எ-31)

## கல்வியியற் கல்லூரி பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.5

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆங்கிலப் பாடநெறியைப் பின்பற்றுபவர்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சை இம்மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப் பத்திரம், நேர அட்டவணை என்பவற்றை இலங்கை பரீட்சைத் திணைக்களம் அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)


# COMPUTER EXPRESS
## Institute of Information Technology

இலங்கையில் தமிழ்மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச் சஞ்சிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி முதலாவது கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் புலமைப்பரிசில் திட்டம் - 2004

புத்தாண்டுப் பரிசாக எமது அனைத்து கணனி கற்கைநெறிகளுக்கும் 80% கட்டணக் குறைப்புச் செய்வதில் பெருமையடைகின்றோம்.

80% OFF

| பாடநெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | கட்டணக் கழிவு (80%) | செலுத்த வேண்டிய கட்டணம் (20%) |
|---|---|---|---|---|
| Diploma in Computer Science | - 4 மாதம் | 6000 | 4800 | 1200 |
| Honours Diploma in Computer Science | - 4 மாதம் | 8000 | 6400 | 1600 |
| Advance Diploma in Computer Science | - 6 மாதம் | 10000 | 8000 | 2000 |
| Diploma in Webpage Designing | - 4 மாதம் | 6000 | 4800 | 1200 |
| Diploma in Auto CAD 2000 | - 3 மாதம் | 5000 | 4000 | 1000 |
| Diploma in Graphics Designing | - 4 மாதம் | 6000 | 4800 | 1200 |
| Diploma in Desk Top Publishing | - 4 மாதம் | 5000 | 4000 | 1000 |
| Diploma in Hardware Engineering | - 3 மாதம் | 5000 | 4000 | 1000 |
| Diploma in Accounting Package | - 3மாதம் | 7000 | 5600 | 1400 |

*Individual Courses*
- Fox Pro, Pascal
- C Language/C++
- Java
- Internet & E.mail
- Microsoft Visual Basic 6.0
- Adobe Page Maker 6.5
- Microsoft Office 2000
- Corel Draw 10

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி

*For Kids* (சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சி)
● Kids Program 3 மாதம் ● Advanced Kids Program 4 மாதம்

20ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுசெய்து கொள்ள முடியும்.

90% கழிவு

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிக் கருத்தரங்கு 2003 இல் பங்குபற்றி சான்றிதழ் பெற்ற அனைவருக்கும் 90% கட்டணக்குறைப்பு வழங்கப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம்: Batch 1: 08-01-2004
Batch 2: 12-01-2004
Batch 3: 15-01-2004
Batch 4: 30-01-2004 *(Maniam's Building)*

கொழும்பில் உள்ள எமது மத்திய நிலையத்தினூடாக சான்றிதம் வழங்கப்படும்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology.

இல.152/1, சிராம்பையடி வீதி, யாழ்ப்பாணம்.
(Off Stanly Rd.)
0777-278883.

(C/32465)(24-11-18)



இன்று மாலை 4 மணிக்கு
ஸ்ரார்
கல்வி நிலையம்
A/L 2006

ACC. திரு.பாலவாசன்
ECO. திரு.மோகன்
B.st. திரு.யசோ

(26786) (24-11-18)



விலை குறைக்கப்பட்டுள்ளது

றோல் கலண்டர்
ரூபா 9 மட்டுமே!
சொற்ப பிரதிகளே உள்ளன.
பிரியங்கா புத்தகசாலை
பிரதான வீதி,
பருத்தித்துறை.

(26777) (26-11-18-24)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

உதயன்

# சந்திரிகாவுக்கு எதிராக சர்வதேச அழுத்தம்?

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பக்கத்திலிருந்த மூன்று அமைச்சுக்களைத் திடீரெனத் தாம் பிடுங்கியதன் மூலம் நாட்டில் நிச்சயமற்ற அரசியல் ஸ்திரத்தன்மையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்படுத்தி நேற்றுடன் இரண்டு மாதங்களாகிவிட்டன.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையால் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் சமாதான முயற்சிகள் அந்தரத்தில் தொங்கி நிற்கின்றன. அந்த முயற்சிகள் இனமேல் எப்போது தொடங்கும்? அது மீண்டும் தொடங்க வாய்ப்புண்டா? அல்லது திரும்பவும் யுத்தம் வெடிக்குமா? - என்ற கேள்விகளுக்கு விடைதர முடியாத ஐய நிலைமை நீடிக்கின்றது.

யுத்தத்தை நிறுத்தி, அமைதியைப் பேணுவதற்கு விடுதலைப் புலிகளுடன் இணக்க ஏற்பாட்டுக்கு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கத்திலிருந்து பாதுகாப்பு அமைச்சு பறிக்கப்பட்டுவிட்டது. புலிகளுடன் சமரசம் பேசும் போக்கைக் கைக்கொள்ளாத - கைக்கொள்ள விரும்பாத - ஜனாதிபதி சந்திரிகாவின் கைகளில் பாதுகாப்பு அமைச்சு சிக்கிக்கொண்டுள்ளது.

இணக்கத்துக்கு வராத இரண்டு தலைமைத்துவங்களின் கீழ் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகிய இரு தரப்புத் தலைமைகளின் கீழ் - இயங்கும் இரண்டு படைகள் கடந்த இரண்டு மாதங்களாகப் பெரிய அனர்த்தங்கள் ஏதுமின்றி யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்து வந்திருக்கின்றமை ஒரு பெரிய கைங்கரியமே.

யுத்தவிளைவுகள் தொடர்பான படைத்தரப்பின் பட்டறிவும், விடுதலைப் புலிகளின் தலைமையின் சகிப்புத் தன்மையுமே இவ்வாறு தங்களுக்குள் இணக்கமில்லாத இரு தலைமைகளின் கீழ் இருந்தும் அரச மற்றும் புலிப் படைகள் இவ்வளவு பொறுப்புணர்வோடு யுத்தநிறுத்தத்தைப் பேணுவதற்குக் காரணம் எனலாம்.

சமாதான முயற்சிகளுக்கான சூழலை முற்றிலும் பாழடிக்கும் விதத்தில் பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பிடுங்கிய ஜனாதிபதியின் செயல், பலத்த சர்வதேசக் கண்டனத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது இப்போது பகிரங்கமாகி வருகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்குச் சென்றிருந்தசமயம், கொழும்பில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் நெருக்கடிகளே சமாதான முயற்சிகள் பாதிக்கப்பட்டமைக்கு முக்கிய காரணம் என அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் கூறியிருந்தார்.

பிரதமர் அமெரிக்கா சென்றிருந்தசமயம், கொழும்பில் குறுக்கு வழி அரசியல் நடவடிக்கைகளை எடுத்த ஜனாதிபதி குமாரதுங்கவின் செயற்பாடே இவ்வளவு நெருக்கடிகளுக்கும் காரணம் என்பதை நேரடியாகச் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார் ஆர்மிடேஜ்.

இதேசமயம், அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவலும் கடந்த வெள்ளியன்று இரண்டு தனித்தனிக் கடிதங்களை ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அனுப்பி வைத்திருக்கிறார் என்று தெரிகின்றது.

இந்தக் கடிதங்களை கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரிலுன்ஸ்டெட் இரு தலைவர்களிடமும் நேரடியாக ஒப்படைக்கவிருந்தார்.

இரண்டும் ஒரு பக்கக் கடிதங்கள் என்றாலும் அவற்றில் வெவ்வேறு வாசகங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலையை இயன்ற விரைவில் தீர்த்து, உடனடியாக அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என்ற வலியுறுத்தலும் அத்தகைய சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்காவின் ஆதரவு என்றும் உண்டு என்ற உறுதிமொழியும் இரு கடிதங்களிலும் அடங்கியுள்ளன.

ஆனால், ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு எழுதிய கடிதத்தில் இதற்கு மேலதிகமாக, அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதற்குக் குந்தமாக - தடையாக - அரசியல் உட்சண்டை அமையக்கூடாது என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தியிருக்கிறார் எனவும் தெரியவருகின்றது.

இதேசமயம் -

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்துக்கு இணைத் தலைமை வகிக்கும் ஏனைய நாடுகளான ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றுடன் கலந்தாலோசனை நடத்தி, தற்போது தடைப்பட்டுள்ள இந்த அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான உத்தி ஒன்றை வகுக்க முனையப் போவதாகவும் அமெரிக்கா கூறியிருக்கின்றது.

இந்த நடவடிக்கைகள், அமைதி முயற்சிகளுக்கு ஆப்பு வைப்பது போல ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்ட - மேற்கொண்டு வரும் - செயற்பாடுகளுக்கு எதிராகச் சர்வதேச அழுத்தம் அதிகரித்து வருவதையே காட்டுகின்றன.

தெற்கு அரசியலைப் பொறுத்தவரையில் கட்டுப்படுத்தல்கள், மட்டுப்படுத்தல்கள் இன்றி - தாம் தொடங்கிய அமைதி முயற்சிகளை - தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் ஒரே நிலைப்பாடாக உள்ளது.

அந்நிலைப்பாடே, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிரான அழுத்தமாகத் தற்போது விரிவடைந்து வருகின்றது.

# பாதுகாப்பான இடங்களுக்கே மின்னிணைப்பு வழங்க முடியும்

## சுன்னாகம் மின் அத்தியட்சகர் விளக்கம்

தெல்லிப்பழை,ஜன.5

மின்சார இணைப்பு வழங்குவதற்குத் தகுதியான முறையில் பாதுகாப்பான மின்சுற்று அமைந்த இடங்களுக்கே மின் இணைபபுக்களை வழங்கமுடியும். மின்சாரத்துக்காக விண்ணப்பித்த அனைவருக்குமே மின்இணைப்புக்கள் வழங்கப்பட வேண்டும் எனக் கருதுவது தவறானதாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் சுன்னாகம் மின்சார நிலைய அத்தியட்சகர் க.நாகராசா.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நலன்புரி நிலையங்களில் இருப்போர் கூட சிலவேளைகளில் மின்இணைப்புக்காக விண்ணப்பிக்கின்றனர். அத்தகைய விண்ணப்பங்கள் மின்சாரசபையினால் நிராகரிக்கப்பட்டுவிடும். சட்டபூர்வமற்ற பாதுகாப்பற்ற இடங்களுக்கு எம்மால் மின் இணைப்பை வழங்கமுடியாது.

மின்சாரசபை மின் இணைப்புக்களை விரைவாக வழங்காத காரணத்தினாலேயே சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளதாக சிலர் கூறி வருகின்றார்கள்.

ஆனால், அதனை ஏற்கமுடியாது. மின் இணைப்புக்குரிய தகுதிகளைப் பரிசீலித்து உரிய காலத்தில் இணைப்புக்களை வழங்குவதற்கு மின்சாரசபை நடவடிக்கை எடுக்கும்.

மின்சார சபைக்கு மின் இணைப்பு பெற விண்ணப்பித்திருப்பினும் உரியமுறையில் மின்சாரசபை மின் இணைப்பை வழங்க முன்னர் களவாக மின்சாரத்தை பெறுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். அதற்கு, மின்சார சபை கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்.

சமீப காலத்தில், மின் இணைப்புக்காக விண்ணப்பித்தோரில் சுமார் நூறு பேருக்கு மின் கம்பங்கள் கைவசம் இல்லாத காரணத்தால் மின் இணைப்புக்களை வழங்க முடியாதநிலையில் இலங்கை மின்சார சபை இருந்தது.

தற்போது மின் கம்பங்கள் கிடைக்கத் தொடங்கியுள்ளன. இதனால் இந்தப் பகுதிகளுக்கு விரைவில் மின் இணைப்பு வழங்கப்படும் - என்று அவர் தெரிவித்தார். (எ-4-150)

ஊர்காவற்றுறை, சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளில்

# கடும் காற்றினால் சேதமடைந்த 189 வீடுகளுக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,ஜன.5

ஊர்காவற்றுறை மற்றும் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுகளில் கடும்மழை, பலத்த காற்று ஆகியவற்றினால் வீடுகள் சேதமடைந்த 189 பேருக்கு அண்மையில் உரிய நஷ்டஈடுகள் வழங்கப்பட்டன.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட தம்பாட்டி, நாரந்தனை, அனலைதீவு, புளியங்கூடல் மற்றும் கரம்பொன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 120 பேருக்கான கொடுப்பனவுகள் அண்மையில் உதவி அரச அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டன.

உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இது தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்ட மாவட்ட செயலக அதிகாரிகள் பாதிக்கப்பட்டோருக்கு கொடுப்பனவுகளை வழங்கினர்.

இதேவேளை, வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள அராலி, சுழிபுரம் மற்றும் மூளாய், தொல்புரம், வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய இடங்களைச் சேர்ந்த 69 பேருக்கு அண்மையில் இதற்கான நஷ்டஈடு வழங்கப்பட்டது.

பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் இந்தக் கொடுப்பனவுகளை வழங்கினார். (எ-175)

# சிவத்தமிழ்ச்செல்வியின் 79ஆவது பிறந்தநாள் அறக்கொடைவிழா

## நாளைமறுதினம் தெல்லிப்பழையில்



வலி.வடக்கு,ஜன.5

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 79 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா நாளை மறுநாள் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை பதில் நீதிவான் மு.சபாநாதனும், ஆசியுரையை சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், வலிகாமம் கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் நிகழ்த்துவர்.

ஆஸ்திரேலியாவில் இயங்கும் ஈழத்தமிழர் கழகத்தின் தலைவா வை.ஈழலிங்கம் வாழ்த்துரை வழங்குவார்.

பிரதம விருந்தினராக பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராசாவும், சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலாளர் கலாநிதி க.குணராசாவும் கலந்து கொள்வர்.

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியால் எழுதப்பட்ட 'அறிவொளி காட்டிய சான்றோர் வரிசையில்' என்னும் நூல்வெளியீட்டு விழா சிறப்பு நிகழ்வாக இடம்பெறும்.

நூலை வலி.வடக்கு பிரதேச செயலாளர் கலாநிதி க.குணராசா வெளியிட்டுவைக்க, வெளியீட்டு உரையை கலாநிதி சி.சிவலிங்கராசா நிகழ்த்துவார்.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனும் சிறப்புரையாற்றுவார். (எ-86-152)

### நாளை

மார்கழி 22
செவ்வாய்க்கிழமை
(06.01.2004)
திதி : சதுர்த்தசி
முன்னிரவு 8.06 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம்
பிற்பகல் 2.11 வரை
இரவு நடேசர் அபிஷேகம்
சுபநேரம்: 11.01 - 12.31
ராகுகாலம்: 3.31 - 5.01
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பழிச் செயல்களை விடு. பாவச் செயல்களை விலக்கு. பெரியோரைப் பேண். பொறுமையைக் கொள். பிறரை அறி. பின்பு உதவு. பிறகு வாழ்.

# விஞ்ஞான சேவைப் பரீட்சையில் மூன்று யாழ்ப்பாணத்தவர் சித்தி

யாழ்ப்பாணம்,ஜன.5

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் நடத்தப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவை வகுப்பு II, தரம் II இற்கான போட்டிப் பரீட்சையில் 3 இலங்கைத் தமிழர்களும், 10 பெரும்பான்மையினத்தவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள தமிழர்கள் பற்றிய விவரம் வருமாறு:-

தே.மனோராவ் (யாழ்ப்பாணம்), ச.ஜெயசுகிர்தன் (மல்லாகம்), சி.துசித்தா (நெல்லியடி) ஆகியோரே இந்தப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த தமிழர்களாவர்.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை அண்மையில் சுகாதார அமைச்சில் நடைபெற்றது. சித்தியடைந்த மூன்று தமிழர்களும் யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் சிறப்பு விஞ்ஞானமாணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# கசிப்பு ஒழிப்பில் ஈடுபட்டோரை வீடு புகுந்து தாக்க கும்பல் முயற்சி!

## பொதுமக்கள் விரட்டியடித்தனர்

தெல்லிப்பழை,ஜன.5

கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை கும்பல் ஒன்று வீடு புகுந்து தாக்க முயற்சித்தது. ஆனால், ஊர்மக்கள் அந்தக் கும்பலை விரட்டியடித்தனர். இந்தச் சம்பவம் ஊரெழு மேற்கில் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதியில் உள்ள சனசமூக நிலைய உறுப்பினர்கள் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் சமீபத்தில் ஈடுபட்டனர். அப்போது தோட்டம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 2 ஆயிரம் லீற்றர்கள் கசிப்பு மற்றும் 2 பரல்களில் கோடா ஆகியவற்றைக் கண்டுபிடித்து அழித்தனர். கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை இடம்பெற்ற தினத்துக்கு மறுநாள், கூரிய ஆயுதங்களுடன் வந்த கும்பலொன்று கசிப்பு ஒழிப்பில் ஈடுபட்டவர்களின் வீடுகளுக்குள் நுழைந்து அவர்களைத் தாக்க முயற்சித்தது.

ஆனால், அங்கு திரண்ட பொதுமக்கள் அந்தக் கும்பலை விரட்டியடித்தனர்.

கும்பலைச் சேர்ந்த ஒருவர் பொதுமக்களிடம் சிக்கினார் என்றும் -

அவர் நையப்புடைக்கப்பட்டு துரத்தப்பட்டார் என்றும் - கூறப்படுகிறது.

இது தொடர்பாகச் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. வன்முறையில் ஈடுபட்ட கும்பலை பொதுமக்களின் உதவியுடன் பொலீஸார் தேடி வருகின்றனர்.

# புகைபோக்கி ஊடாக நுழைந்து நகைகள், பணம் அபகரிப்பு!

ஊர்காவற்றுறை,ஜன.5

புகைபோக்கியில் வெளிச்சத்தின் பொருட்டு அமைக்கப்பட்டிருந்த வெளியினூடாக வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தங்க நகைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் ஆகியவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

ஊர்காவற்றுறை, புளியடி வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த புதுவருடத்தினத்தன்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் நள்ளிரவு தேவாலயத்தில் இடம்பெற்ற புதுவருட ஆராதனைக்கு சென்றிருந்தனர் என்றும -

அவ்வேளை, சமையலறையின் புகைபோக்கியில் வெளிச்சத்தின் பொருட்டு பொருத்தப்பட்டிருந்த கம்பிவலையை அகற்றி உள்ளே நுழைந்த திருடர்கள் சுமார் 3 பவுண் மதிக்கத்தக்க கைச்சங்கிலி, 2 மோதிரம் உட்பட ஒரு தொகைப் பணம் என்பனவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர் என்றும் - கூறப்பட்டது.

புதுவருடக் கொண்டாட்டத்தின் பொருட்டு பருத்தித்துறையில் இருந்து வந்து குறித்த வீட்டில் தங்கி நின்ற உறவினர்களது நகைகளும் பணமுமே இவ்வாறு திருட்டுப் போயுள்ளதாகவும் -

நகைகளைப் பறிகொடுத்தவர்கள் வீட்டிலுள்ளவர்களுடன் இணைந்து தேவாலயத்திற்கு சென்றிருந்தனர் என்றும் - தெரிவிக்கப்படுகிறது. (எ-16)

# கமநல நிலையம் அமைக்கக் கோரிக்கை


வடமராட்சி கிழக்கு,ஜன.5

மருதங்கேணிப் பகுதியில் கமநல சேவை உப அலுவலகம் ஒன்றினை அமைக்குமாறு யாழ். அரச அதிபரிடம் கோரப்பட்டுள்ளது. அப்பகுதி விவசாயிகள் விவசாய உள்ளீடுகள் மற்றும் ஏனைய தேவைகளைப் பெற்றுக்கொள்ள வசதியாகவே இந்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அப்பகுதியிலுள்ள விவசாய அமைப்புகள் அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் -

மருதங்கேணி விவசாயிகள் கவனிப்பாரற்ற நிலையில் கைவிடப்பட்டுள்ளார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**அருமைத்துரை பரமுருகானந்தன்**

**(பரா)**

*தாயின் மடியில்* 1969. 05. 26

*ஆண்டவன் மடியில்* 2001. 02. 21

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**சிவமதி பவனீதரன்**

**(விஜி)**

*தாயின் மடியில்* 1978. 07. 12.

*ஆண்டவன் மடியில்* 2002. 12. 17

**திதி: திரியோதசி**

மூத்த மகனே!
முத்தான செல்வமகனே!
அன்பு மகளே!
ஆறாவது செல்வமகளே!
சிவன் பூசைகளாம
சிவராத்திரி தினத்தன்றும்
திருவெம்பா தினத்தன்றும்
சிவபதம் அடைந்தீர்களே!
சந்ததி திதியாம் திரியோதசியில்
மீண்டும் இப்பூவுலகில் உதிப்பீர்கள் - என
ஸ்ரீ சித்தி விநாயகர் பெருமானை
வேண்டுகின்றோம்.

*உடுவில் தெற்கு,*
*பாலவோடை, மானிப்பாய்.*

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், மச்சான், மைத்துனி,
மகன், மருமகன்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**இரத்தினம் பரராஜசிங்கம்**

பிறப்பு: 1942.07.21



திருமதி

**பரராஜசிங்கம் சந்திராதேவி**

பிறப்பு: 1952.11.17



செல்வன்

**பரராஜசிங்கம் கஜன்**

பிறப்பு: 1982.07.15



செல்வி

**பரராஜசிங்கம் தயாளினி**

பிறப்பு: 1972.10.20



செல்வி

**பரராஜசிங்கம் சுஜாதா**

பிறப்பு: 1976.05.09

**இறப்பு: 2002.12.17**

திதி: திரியோதசி

*இரத்த உறவுகளே பஞ்ச முகங்களே*
*வீடு கொள்ளா முத்துக்களே*
*திருவெம்பா ஆறாம் நாள் பிரதோஷ தினத்தன்று*
*நெய் விளக்கை மோட்ச விளக்காக ஏற்றிவிட்டு*
*பெருங்கணக்கர் விசாரணையின்றி*
*சந்ததி திதியில் விண்ணுலகம் சென்றதன்*
*காரணம்தான் நாமறியோம் – மீண்டும்*
*இப்பூலோகில் வந்து உதிப்பீர்கள் என*
*ஸ்ரீ சித்தி விநாயகர் பெருமானை*
*வேண்டுகின்றோம்.*

இ.அருமைத்துரை,
உடுவில் தெற்கு,
பாலவோடை, மானிப்பாய். (26766) (25-11-18)

**அண்ணன், மச்சான்,**
**பெரியப்பா குடும்பத்தினர்.**

## 41ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 25 - 10 - 1932



உதிர்வு 29 - 11 - 2003

அமரர்

**கணபதிப்பிள்ளை நமசிவாயம்**

(சின்னையா - ஆசாரி),
4ஆம் வட்டாரம் - புங்குடுதீவு.

**பண்புடனும் பாசத்துடனும் பாரினிலே எங்களை வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும ஆறுதல் கூறியோருக்கும் குடும்பத்துடன் இணைந்து உறுதுணையாக நின்று உதவியும் ஒத்தாசையும் புரிந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அந்தியேட்டிக்கிரியை நாளை (06. 01. 2004) செவ்வாய்க் கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலையிலும் வீட்டுக்கிரியை 08. 01. 2004 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்கும வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*தற்காலிக முகவரி:*
62/2, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No: 021 222 7215,
0777 114073.

என்றும் உங்கள் நினைவுடன்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(26776) (26-11-18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி நடராசா கனகம்மா**

மலர்வு 22-03-1933

உதிர்வு 17-12-2002

திதி: 05-01-2004

**ஆண்டு ஒன்று ஆயிடினும்**
**ஆறுதில்லை எம் இதயம்**
**ஈண்டு உங்களை நினைத்தே வாழுகின்றோம்**
**மீண்டும் ஒரு முறை வந்தெமக்கு**
**திருமுகத்தை காட்டீரோ.**
**ஆத்மசாந்திக்காக பேத்தி அம்பாளை**
**வேண்டுகின்றோம்.**

***ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

பகவான் பாதை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (சி-32484) (26-18-11) - **குடும்பத்தினர்.**

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# தொண்டமானாறு கடல் நீரேரியை நன்னீர்த் திட்டமாக்க முயற்சி

வடமராட்சி,ஜன.5

தொண்டமானாறு கடல் நீரேரியை நியாப் திட்டத்தின் உதவியுடன் நன்னீர்த் திட்டமாக மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நியாப் நிறுவனம் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திணைக்களம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று இது தொடர்பாக தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

அந்தக் குழு விரைவில் நன்னீர்த் திட்டத்தை ஏற்படுத்துவதற்காக திட்டங்கள் கொண்ட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கடல்நீரேரியில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுள்ள வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசங்களைச் சேர்ந்த தொண்டமானாறு அக்கரை, கெருடாவில், கரவெட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மற்றும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசப் பிரதிநிதிகள் ஆகியோருடன் நன்னீர்த்திட்டத்துக்கான அறிக்கையை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள பிரதிநிதிகள் குழு அண்மையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

இதேவேளை - இந்தக் கடல் நீரேரி ஆரம்பமாகும் வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களையும் இப்பிரதிநிதிகள் குழுவினர் விரைவில் சந்தித்து உரையாடியுள்ளதாகவும் கூறப்பட்டது.

தொண்டமானாறு கடல்நீரேரி நன்னீர்த்திட்டமாக மாற்றப்படுவதை வரவேற்கும் அதேசமயத்தில், கடலேரியில் தொழில்செய்து வரும் மீனவர்களுக்கு தொழில் மாற்றுத் திட்டம் ஏற்படுத்தித் தரப்படவேண்டும்.

இதுதவிர, நன்னீரில் மீன்வளர்பபு, இறால் வளர்ப்பு ஆகியவற்றையும் அமுல்படுத்துவதுடன், கடல்நீரேரியின் அருகில் உள்ள முடிக்குரிய நிலங்களில் நெற்செய்கை உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ள வாய்ப்பாக அமையும்.

அந்நேரத்தில் முடிக்குரிய காணிகளை, கடல்நீரேரியை நம்பியுள்ள மீனவர்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட வேண்டுமென மீனவர்கள், பிரதிநிதிகள் குழுவிடம் வற்புறுத்தியுள்ளனர் எனக் கூறப்பட்டது. (எ-173)

## பௌராணிகர் கௌரவிப்பு

வலி.வடக்கு, ஜன.5

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தில் இடம்பெற்ற திருவாதவூரடிகள் புராண பூர்த்தியும் பௌராணிகர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம் பெறவுள்ளன.

(ஒ-86)

## மூலதனம் இல்லாதவர்களுக்கு கடன் உதவி வழங்க நடவடிக்கை

வலி.வடக்கு, ஜன.5

திறமையிருந்தும் மூலதனம் இல்லாததால் தொழில் முயற்சிகளில் ஈடுபடமுடியாதவர்களுக்கான புதிய கடன் திட்டமொன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மத்திய வங்கியின் உதவியுடன் பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் ஊடாக இந்தக் கடன் திட்டம் அமுல்படுத்தப்படும்.

8 சதவீதத்துக்கும் குறைவான வட்டியுடன் இந்தக் கடன் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் 5ஆயிரம் ரூபாவிலிருந்து 10 லட்சம் ரூபா வரை கடனாகப் பெறமுடியும்.

இந்தக் கடனைப் பெறுவதற்கு உத்தரவாதம் எதுவும் தேவையில்லை எனவும் -

இந்தக் கடன்களை மீளச் செலுத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்படும் எனவும் -

கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

(ஒ-4)

## மருதங்கேணியில் மீள்குடியமர்வு கொடுப்பனவு

வடமராட்சி கிழக்கு,ஜன.5

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் சுமார் 800 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளது.

யாழ்செயலக அதிகாரிகள் நாளை மருதங்கேணியில் கொடுப்பனவை வழங்குவதற்கான குடும்பத் தலைவர்களின் கையொப்பங்களைப் பெறவுள்ளனர்.

ஏற்கனவே, மீளக்குடியமர்வு கொடுப்பனவாக பத்தாயிரம் ரூபா பெற்றவர்களுக்கு மீதி பதினைந்து ஆயிரம் ரூபாவும் இதுவரை கொடுப்பனவைப் பெறாதவர்களுக்கு இருபத்தைந்து ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-182)

# முதியோர் அ.அட்டை வழங்குவதில் அதிக அக்கறை காட்டுகிறது அரசு

## தேசிய செயலகப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.5

முதியவர்களுக்கான விசேட அடையாள அட்டை பெறாதவர்களுக்கு அதனை வழங்க அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

முதியவர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் யமுனா சித்தாங்கனி இத்தவலைத் தெரிவித்தார்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதியவர்களுக்கான அடையாள அட்டை வழங்கப்படுகின்றது. நாடளாவிய ரீதியில் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு இத்தகைய முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

முதியவர்களுக்கான தேசிய செயலகத்தில் இந்த அடையாள அட்டையை ஒரே நாளில் பெற்றுக்கொள்ள முடியும். மருத்துவ மனைகள், தபால் நிலையங்கள், அரச நிறுவனங்கள் போன்றவற்றில் இந்த அடையாள அட்டையைக் காண்பித்துத் தமது பணிகளை முதியவர்கள் சிரமமின்றி நிறைவேற்றிக் கொள்ளமுடியும்.

இதேவேளை, அரச மருந்துச் சாலைகளில் முதியோர் அடையாள அட்டைகளுக்கு விசேட விலைக் கழிவும் வழங்கப்படுகிறது.

ஆகவே, முதியவர்கள் இந்த அடையாள அட்டைகளைப்பெற்று பயனடைய முடியும்.

- இவ்வாறு பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ)

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த விரைவில் விசேட செயற்றிட்டம்

## ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு,ஜன.5

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட செயற்றிட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று கண்டியில் இடம்பெற்ற பொலீஸ் அதிகாரிகளுடனான சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் குற்றச் செயல்கள் திடீரென அதிகரித்துள்ளன. இவற்றில் சுமார் 45வீதத்துக்கு மேற்பட்ட குற்றங்கள் மேல்மாகாணத்திலேயே நடைபெறுகின்றன.

இத்தகைய குற்றங்களை ஒழித்துக் கட்டுவதற்குப் புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அத்திட்டம் முதற்றடவையாக மேல் மாகாணத்திலேயே நடைமுறைப்படுத்தப்படும். பின்னர் படிப்படியாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

பொலீஸார் பொதுமக்களுடனான உறவை சுமுகமாகப் பேணவேண்டும். அரசியல்வாதிகளின் சலுகைகளுக்கு அடிபணிந்து அவர்களுக்குப் பின்னால் செல்வதை அவர்கள் தவிர்த்துவிடவேண்டும்.

அப்போதுதான், நாட்டில் குற்றச் செயல்களை ஒழித்துக் கட்டமுடியும். பொலீஸாரின் பதவி உயர்வுகளை இனிமேல் பாரபட்சமற்ற முறையில் வழங்குவதற்கு பொலீஸ் சேவை ஆணைக் குழு தீவிர கவனம் செலுத்தும் - என்று தெரிவித்தார்.

(எ-4)

# புலிகளே ஏகப்பிரதிநிதிகள் என்பதை அன்றே கூறியவர் மாமனிதர் குமார்

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் முன்னாள் தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நான்காவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நான்காவது சிரார்த்ததினம் இன்றாகும். 05-01-2000 அன்று இவர் வெள்ளவத்தையில் வைத்துக் கயவர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். இலங்கைச் சரித்திரத்திலேயே ஒரு தமிழ்த் தலைவர் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த காரணத்தினால் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களால் கொலை செய்யப்பட்டமை இதுவே முதற்றடவையாகும். சுட்டுக கொலை செய்யப்பட்ட சமயம் அவர் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவராக இருந்தார். மாபெரும தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் மறைவின் பின்னர் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்று எல்லோரும் மெச்சும் வகையில் கட்சியை வழிநடத்தி வந்தவரும் இவரே.

நான், சட்டத் தொழிலை ஆரம்பித்த காலந்தொடக்கம் அவர் இறக்கும் வரை அவருடன் மிகவும் அந்நியோன்னியமாகப் பழகிவந்தேன். என்னை அவரும், அவருடைய குடும்பத்தினரும் தமது குடும்ப அங்கத்தவராகவே கணித்தனர். அவர் என்னை எப்பொழுதும் அண்ணை என்றே அழைப்பார்.

நான் எனது சட்டத்தொழிலை அவருடன் இணைந்தே மேற்கொண்டேன். அப்போதைய அரசியல் சூழ்நிலைக்கேற்ப அவர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவராக இருந்தபோதும் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அரசியல் சித்தாந்தத்தை ஏற்று இலங்கை வாழ் தமிழரது பிரச்சினையை திம்புக் கோட்பாட்டினடிப்படையில் தீர்க்கவேண்டும் என்ற நம்பிக்கையுடன் அப்படியான ஒரு தீர்வைக்கொண்டு வருவதற்கு எல்லா வழிகளிலும் செயற்பட்டார். இதே கொள்கையையே நானும், எனது கட்சியும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றோம். அண்மையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும், விடுதலைப் புலிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வுயோசனைக்கு அடித்தளமிட்ட பெருமை அவரையே சாரும்.

இலங்கையில் விடுதலைப் புலிகளின் பெயரை உச்சரிக்க எவரும் திராணியற்று இருந்த காலத்தில் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசித்தீர்க்க வேண்டுமென்ற யதார்த்தத்தை பகிரங்கமாக வெளிக்கொணர்ந்த பெருமை அவரையே சாரும். இன்னும், வேலுப்பிள்ளை பிரபாகரனே தமிழர்களின் தேசியத்தலைவர் என்றும் - புலிகளே, வடக்கு - கிழக்குத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்றும் ஏற்று அதை இலங்கையிலும், சர்வதேசமெங்கும் ஆணித்தரமாக எடுத்துரைத்தவர் குமார் பொன்னம்பலமே. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையையும் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமை மீறல்களையும் சர்வதேசமயப்படுத்திய பெருமை அவரையே சாரும். இதற்காக அவருக்கு தமிழ் மக்கள் என்றும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

இத்தகைய கொள்கையினால் அவரைக் கைது செய்யும் நோக்குடன் அப்போதைய அரசு இரகசியப் பொலீஸாரை அவரது வீட்டிற்கு அனுப்பி பலமணி நேரமாக விசாரணை செய்து, அவரது வாக்குமூலத்தை எடுத்தது. இன்னும் செம்மணி புகழ் அம்மணி சந்திரிகா அம்மையார், தென்னாபிரிக்காவில் வைத்து தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகள் அல்லர்



எனப் பேட்டியளித்ததைக் கண்டித்த ஒரே தமிழ்த் தலைவர் குமாரே. அவர் இறப்பதற்கு சொற்ப நாள்களுக்கு முன்னர் சந்திரிகா அம்மையார் தொலைக்காட்சியில் விடுதலைப் புலிகளை கடுமையாகத் தாக்கி, புலிகளுக்கு ஆதரவாக இயங்குபவர்கள் கொழும்பில் இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற தோரணையில் பேசியிருந்தார். மறுநாள்காலை குமார் என்னுடன் தொடர்பு கொண்டு சந்திரிகா அம்மையாரின் தொலைக்காட்சி உரையைக் குறிப்பிட்டு தான் நீண்ட காலம வாழ்வது கடினமென என்னிடம் சொன்னார். அவரின் கொலைக்கு சந்திரிகா அரசே பொறுப்பேற்க வேண்டும்.

குமாரின் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்திய பொலீஸ் அதிகாரியான விக்கிரமசிங்க விசாரணை அறிக்கையையும் கொலையோடு சம்பந்தப்பட்டவர்களின் விவரத்தையும் அந்த ஆண்டு புரட்டாதி மாதமே ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளித்தும், அவர் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் இது தொடர்பாக பலமுறை நாடாளுமன்றத்தில் எனது கடும் விசனத்தைத் தெரிவித்துள்ளேன். தமிழினம் அநாதையாக்கப்பட்டு ஒரு தகுந்த தலைமைத்துவம் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கும் போது அந்த வெற்றிடத்தை நிரப்பத்தகுந்த ஒரே தமிழ்த்தலைவராக விளங்கியவர் அவரே. இதை அறிந்து தான் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன், குமார் பொன்னம்பலம் இறந்த போது அவருக்கு தமிழீழத்தின் அதியுயர் விருதான மாமனிதர் என்ற பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தார். அவர் இறந்த பின்னர் நான் கட்சியின் தலைமைப்பதவியை ஏற்றேன். குமாரின் புகழே என்னை நாடாளுமன்றிற்குச் செல்ல வழி வகுத்தது.

புலம்பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர், இலங்கையிலும், வெளிநாடுகளிலும் ஆற்றிய தொண்டுகளால் அவர்களில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார். இலங்கை அரசியல் சரித்திரம் எழுதும் போது ஜனநாயகக்கட்சி கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் (Democratic People`s Alliance Manifesto) உருவாவதற்கு இவர் ஆற்றிய சேவை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். இந்த விஞ்ஞாபனத்தை பல கட்சிகள் பல நாள்கள் சேர்ந்து உருவாக்கின. ஒரு காலத்தில் இது 'பொன்னாவின் விஞ்ஞாபனம்' என்று கூறப்பட்டது. இந்த விஞ்ஞாபனத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தினேஸ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி., முஸ்லீம் காங்கிரஸ், பல்கலைக்கழக மாணவர் முன்னணி என்பன சேர்ந்து உருவாக்கின. இதில் அனைத்துக் கட்சிகளும் கையெழுத்திட்டன. இதை சிறிமாவோ பண்டாரநாயக்கா கைவிட்டிருக்காவிட்டால் தமிழர் பிரச்சினை அப்பொழுதே தீர்க்கப்பட்டிருக்கும. 1985 தொடக்கம் இறக்கும்வரை அவர், பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களுக்காக இலவசமாக வாதாடி அவர்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார். அவர் தமிழ் இளைஞர்களுக்கு ஆற்றிய சேவை இதுவரை வேறு எவரும் செய்யவில்லை.

ஆகையினால்தான் போலும், அவர் இறந்தபோது களுத்துறைச் சிறைச்சாலையில் கறுத்தக்கொடி பறக்கவிடப்பட்டது. அவரது மறைவிற்கு சற்று முன், தேர்தலை எதிர் நோக்கி தமிழ்ப் பகுதிகளில் போட்டியிடுவதற்கு ஒரு பட்டியலை அவர் தயாரித்தார். இதுவும் அவரது கொலைக்கு காரணமாக அமைந்திருககலாம். இவரைப் போல இன்னொருவர் பிறக்கப்போவதில்லை. நானும், எனது கட்சியும் இவரது கொள்கையைத் தொடர்ந்தும் பின்பற்றுவோம் என உறுதி கூறுகின்றேன்.

**அப்பாத்துரை விநாயகமூர்த்தி**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாணம்**
**தலைவர்,**
**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**

மாமனிதர் தன்னைப் பற்றி கூறும் போது பின்வருமாறு கூறினார். "நீ உனது உயிரைப் பற்றிப்பயப்பட்டால் உனது வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும். நீ வாயை மூடிக் கொண்டே வாழவேண்டுமானால், அந்த வாழ்க்கையின் அர்த்தம் தான் என்ன. நான் சுயமரியாதையுள்ள தமிழனாகவே வாழவிரும்புகிறேன். நான் ஓர் அடிமையாக வாழ்ந்து இனத்துவேசிகளும், ஆட்சியில் உள்ளவர்களும் கூறுபவைகளுக்கு தலையாட்டிக் கொண்டிருக்க விரும்பவில்லை. அவர்கள் விரும்புவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாவிடில் அவர்கள் கூறுவது எனது நம்பிக்கைக்கு எதிராக அமைந்தால் நான் ஏன் எனது மனச் சாட்சிக்கு எதிராக மௌனம் சாதிக்க வேண்டும்."

★

# எண்கணித ஜோதிடம் - 2004

## எண் - 3

3, 12, 21, 30 ஆம் திகதிகளில் பிறந்த நீங்கள் காரியவாதிகள். எதிலும் லாபமில்லாமல் இறங்கமாட்டீர்கள். தானும் தன்னை ஆதரிப்பவர்களுக்கும் நன்மை பெறவேண்டி உழைப்பீர்கள். உங்கள் பாதை ஒரு தனிப்பாதை. இருப்பதைக் கொண்டு நிறைவு அடையாதிருப்பது மனிதனின் துரதிஷ்டமாகும் என்ற தத்துவத்தை மனதில் போட்டுப் பாருங்கள். எது எப்படியோ போகட்டும். ஆனால், இறைவனை நினைக்க மறவாதீர்கள். 'பிறர் குற்றம் பார்ப்பதைவிட தன் குற்றம் பார்த்துத் திருத்திக் கொள்பவரே தெய்வீக சக்தியைப் பெறுவர்' என்பதை மறந்து விடாதீர்கள்.

நல்லவர்களாக இருந்தால் மட்டும் போதாது. வல்லவராகவும் இருக்கவேண்டும் என்று கூறுவீர்கள். இந்தக் காலத்தில் கொஞ்சம் ஏமாளியாக இருந்தால் எல்லோரும் சேர்ந்து நம் தலையை மொட்டை அடித்து விடுவார் என்றும் சொல்வீர்கள்.

எதற்கும் தயாராக இருப்பவனை நோக்கித்தான் வாய்ப்புக்கள் தேடிவரும்.

பொதுவாக உங்கள் வாழ்க்கை எளிமையும், புதுமையும் கலந்ததாக இருக்கும். தன்னை உயர்த்திக் கொள்வதில் ரொம்ப கவனமாக இருப்பீர்கள். எந்தத் தொழிலைச் செய்தாலும் அதில் உயர்வுக்கு வரவேண்டும் என்பதே உங்கள் குறிக்கோளாகும். எதிர்ப்புக்கள் இருந்தபோதிலும் அதை ரொம்ப சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். விருந்தோம்பல், மனிதர்களை மதித்தல் போன்றவைகள் உங்களின் பெருந்தன்மையைக் குறிக்கும். அடிக்கடி பெரிய திட்டங்களைப் போட்டு மாட்டிக்கொள்ள வாய்ப்பு இருப்பதால் எதிலும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

அகலக்கால் வைக்கும் பழக்கத்தைவிட்டுவிட வேண்டும். பிடிவாதம், திடீர் கோபம் இரண்டையும் கண்டிப்பாக ஒதுக்கவேண்டும். நாட்டுப்பற்றும் நல்ல கொள்கையும் கொண்ட உங்களுக்கு மறைமுக எதிர்ப்புக்கள் இருக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள். சோம்பேறிகளைக் கண்டாலே உங்களுக்குப் பிடிக்காது. பணம் அதிகம் ஈட்டும் வாய்ப்பு வந்தவுடன் மக்களுக்குத் தொண்டு செய்ய முன்வருவீர்கள். எந்தவொரு காரியத்தையும் நேரடிப் பார்வையிலேயே செய்துமுடிப்பீர்கள். பிறர் உதவியை எதிர்பார்க்காது தன்மான உணர்வுடன் வாழ்வீர்கள்.

சமுதாயம் மேம்பாடு அடைய வேண்டுமானால் ஒழுக்கம், பக்தி, ஞானம் கண்டிப்பாகத் தேவை என்று கூறுவீர்கள். பிச்சைக்காரர்களே நம் நாட்டில் இருக்கக் கூடாது என்று விரும்புவீர்கள்.

உணவைப் பொறுத்தவரை காரம், புளிப்பு, இனிப்பு போன்ற சாப்பாட்டு வகைகள் ரொம்பப் பிடிக்கும். அதே நேரத்தில் அளவுக்கு மீறி காரம் சாப்பிட்டால் மூலநோய் வயிற்றுக் கோளாறு வர வாய்ப்பிருக்கின்றது என்பதை நீங்கள் உணரவேண்டும். தன்னம்பிக்கையுடன் வாழ்வோர்களை உங்களுக்கு ரொம்பபிடிக்கும். விளையாட்டு, சிரிப்பான சினிமாப்படங்கள் உங்கள் மனதிற்கு மகிழ்ச்சியூட்டும்.

நல்ல உடல் அமைப்புக் கொண்ட உங்களுக்கு உடல் பலமும், மனப்பலமும் சிறப்பாக இருக்கும். அடிக்கடி 'டென்சன்' ஆவதால் நரம்பு சக்தி குறையும். யோகப் பயிற்சி உங்கள் உடலுக்கு மிகவும் நல்லது. மனம் தெளிவடைய தியானம் மிகவும் நல்லது. இறைவனை அடிக்கடி நினைக்க வேண்டும், பொதுவாக உங்கள் உணவில் பழங்கள் சேர்த்துக் கொள்வது நல்லது. பெரும்பாலும் உணவில் கொழுப்பு சம்பந்தமான சாப்பாட்டு உணவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும்.

காலையில் எழுந்தவுடன் பல் துலக்கிவிட்டு இரண்டு டம்ளர் தண்ணீர் அருந்துவது மிகவும் நல்லது. அடிக்கடி அரைக்கீரை, எள் உருண்டை, பேரீச்சம்பழம் சாப்பிடுவது மிகவும் நல்ல பலனைத் தரும். அவ்வப்போது 'டென்சன்' ஆகும் போது வாயில் புண் காணப்படும். அந்த நேரங்களில் தேங்காயைத் துருவி வாயில் போட்டு மென்று உமிழ்நீர் இறக்கினால் உடனே புண் ஆறிவிடும். நரம்பு சக்தி கூடுவதற்கு முருங்கைக் கீரையை நன்கு வேகவைத்து சிறிதளவு சீரகம், உப்பு, மிளகு போட்டு அருந்தி வந்தால் உடல் பலம் பெறும்.

அவ்வப்போது ஏற்படும் உஷ்ணத்தால் வயிற்று வலி ஏற்படலாம். அந்த நேரங்களில் மணத்தக்காளிக் கீரை சாப்பிடுவது மிகவும் நல்லதாகும். ஏற்றுமதி, புடைவை, தோல் ,போன்ற தொழில்கள் அவ்வப்போது நன்மை செய்யும். நல்ல லட்சியங்களை முன்வைத்து வாழும் உங் களுக்கு அவ்வப்போது திடீர்திடீரெனப் பணம் வரும். உங்கள் மேல் சிலர் பொறாமைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. உங்கள் செல்வாக்கு கூடிக் கொண்டேதான் செல்லும். பதவி அந்தஸ்து உயரும். ஆண்டவனைத் தியானம் செய்யுங்கள்.

### நோய்

தோல் வியாதிகள், ஒவ்வாமை, சர்க்கரை, கொழுப்பு, கால்வலி சம்பந்தமான வியாதிகள் வந்து நீங்கும். பொதுவாக தியானம், யோகப் பயிற்சி உடல் நலத்தைக் காக்கும்.

### மாணவர்களுக்கு

உழைப்பாளியான உங்களுக்கு அதிர்ஷ்டம் பெற கையெழுத்து அமைப்பு சிறப்பாக இருக்கவேண்டும். இந்த ஆண்டு கடுமையாக உழைத்து வெற்றிபெற வேண்டும்.

### மாதப் பலன்கள்

*ஜனவரி* : உடனே எதையும் முடிக்கப் பாடுபடுவீர்கள். பணம் பல வழிகளில் வரும். அடிக்கடி 'டென்சன்' ஆகி விடுவீர்கள். பாராட்டும் புகழும் கூடும். எதையும் 'டாம் டூமெ'னச் செய்வீர்கள். வெளியூர், உல்லாசப் பயணம் ஏற்படும். சிறிய விபத்து ஏற்பட்டுத் தப்பிவிடுவீர்கள். பெரிய ஞானிகளின் சந்திப்புக் கிடைக்கும். வாழ்க்கையில் புதுமையாக எதையும் செய்யவேண்டும் என்று முயற்சிப்பீர்கள். எதிர்ப்பு இருக்கும். குடும்பத்தில் வாக்கு வாதம் காணப்படும். மருத்துவச் செலவுண்டு. தொழில் தடைகள் ஏற்பட்டு நீங்கும். நன்றிகெட்ட சிலரை நினைத்து வேதனைப்படுவீர்கள்.

*பெப்ரவரி*: எதையும் முடித்துக் காட்டுவீர்கள். செய்யும் தொழில் படிப்படியாக உயரும். காதல் கைகூடும். பணம் பல வழிகளில் வரும். வெளியூர், வெளிநாட்டுப் பயணம் செய்வீர்கள். வீடு, வாகனம், நிலம் இவற்றால் இருந்த பிரச்சினை தீரும். காதல் மலரும். திடீர்ப்பயம் அடிக்கடி தோன்றும். எதிலும் குழப்பம் தோன்றினாலும் உடனே அது மறைந்து விடும். சளி சம்பந்தமான வியாதி தோன்றி மறையும். பெரிய மனிதர்களின் உதவியும் ஒத்துழைப்பும் மனதிற்கு இதமாக இருக்கும். எந்தக்காரியமும் உங்களுக்கு முடிந்துவிடும். தொழில் உயரும். பொருள் சேர்க்கை உண்டு.

*மார்ச்:* அடிக்கடி உஷ்ணத்தால் உடல்பாதிக்கும். பணம் பல வழியில் வரும். திடீர் பயணங்கள் ஏற்படும். எடுத்த காரியம் கைகூடும். சுபகாரியத்திட்டம் போடுவீர்கள். காதல் மோதலில் முடியும். அடிக்கடி மன வருத்தம் ஏற்படும். வேண்டாத சிந்தனைகள் தோன்றி மறையும். இடுப்புவலி , மலச்சிக்கல் தோன்றி மறையும். எதிர்பாராத வகையில் ஆடை, ஆபரணச்சேர்க்கை, சொத்துக்கள் வாங்க, விற்க வாய்ப்பு ஏற்படும். கொடுக்கல், வாங்கல் சிறப்பாக இருக்கும்.

*ஏப்ரல்*: பிறரிடம் பகை ஏற்படாதவாறு பொறுமையாக நடந்துகொள்ளவேண்டும். பணம் பல வழிகளில் வந்து உங்கள் பையை நிரப்பும். ஆனால், தண்டச்செலவு வந்து பணத்தைப் பறித்துச்செல்லும். பெரிய மனிதர்களின் உதவியும், நண்பர்களின் ஒத்துழைப்பும் மனதிற்கு ஊட்டம் போன்று இருக்கும். பல நல்ல திட்டங்கள் போடுவீர்கள். காதல் கசக்கும். அடிக்கடி கோபம் வரும். நரம்பு சம்பந்தமான வியாதி தோன்றி மறையும். எதிர்ப்புக்களைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

*மே*: போராடி எதையும் சாதிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சியளிக்கும். சொத்துக்களில் ஏற்பட்ட வில்லங்கம் நீங்கும். வீடு, வாகனம், நிலம் வாங்க, விற்க சிறப்பாக இருக்கும். எதிலும் அவசரமிருக்கும். பாராட்டும் புகழும் கொடிகட்டிப் பறக்கும். இடுப்பு, கால் இவற்றில் வலி வந்து நீங்கும். பலருடைய ஒத்துழைப்பு மனதிற்கு பலமாக இருக்கும். வயிற்றில் நோய் வந்து நீங்கும். கல்வி, உத்தியோகம் உயரும். சிறு விபத்து ஏற்பட்டுத் தப்பிவிடுவீர்கள். கொடுக்கல் வாங்கல் சிறப்பாக இருக்கும்.

ஜூன்:- அலைச்சல் இருக்கும். நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்றாக இருக்கும். பணம் பல வழிகளில் வந்தாலும் செலவு காத்துக்கொண்டு இருக்கும். மனதில் இனம்புரியாத குழப்பம் வந்து நீங்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு, சண்டை, சச்சரவு வந்து போகும். எதையும் போராடி முடிக்கவேண்டியிருக்கும். பயம் தோன்றும். பாராட்டும், புகழும் கூடும். சொத்துக்களில் ஏற்பட்ட வில்லங்கம் நீங்கும். எதிலும் பயம் காணப்படும். முன்பின் ஆராய்ந்து செயற்படுவதால் எதிலும் எளிதில் தப்பி விடுவீர்கள்.

ஜூலை:- நினைத்ததை முடிப்பீர்கள். பணம்பல வழிகளில் வந்தாலும் செலவை மட்டுப்படுத்த முடியாது தவிப்பீர்கள். காதல் கைகூடும். எதிர்பாராத நன்மைகள் நடக்கும். உடலில் உஷ்ண வியாதி தோன்றிமறையும். குடும்பத்தில் குதூகலம் காணப்படும். எடுத்தெறிந்து பேசுவதால் கருத்து வேறுபாடு மற்றவர்களிடம் உருவாகும். வீடு, வாகனம், நிலம் வாங்க, விற்க சிறப்பாக இருக்கும். திருமணக் காரியம் நடக்கும். வெளியூர் பயணம் செய்வீர்கள். திடீர் நன்மைகள் நடக்கும். போட்டிகள் குறையும். திடீர் மருத்துவச் செலவு உண்டு.

*ஓகஸ்ட்*: உடனே எதையும் முடிக்கப் பாடுபடுவீர்கள். பணம் பல வழிகளில் வந்து பையை நிரப்பும். வீடு, வாகனம், நிலம் வாங்க, விற்க சிறப்பாக இருக்கும். பாராட்டும் புகழும் கூடும். எதையும் உடனே செய்து முடிக்க முயற்சிப்பீர்கள். காமம் வரும். பக்தி, ஞானம் இவற்றில் மனதைப்போட வேண்டும். புதியதிட்டம் போட்டு அது வெற்றிபெறப் பாடுபடுவீர்கள். திடீரென மற்றவர்களிடம் கருத்து வேறுபாடு தோன்றும். இரத்த அழுத்தம் திடீரெனக் கூடும். நல்ல சிந்தனைகள் தோன்றும். எதிர்பாராத செலவு ஏற்படும்.

*செப்ரெம்பர்*: உங்கள் பேச்சாற்றலால் முடியாத விஷயத்தைக்கூட முடிப்பீர்கள். குழப்பம் மனதில் தோன்றும். கிடைக்குமா கிடைக்காதா என்று நினைத்த காரியம் கூட திடீரென முடிந்துவிடும். பணம் பல வழிகளில் வந்து சேரும். இடுப்பு, வயிறு, இவற்றில் வலி வந்து நீங்கும். விருந்து உபசரிப்பு உண்டு. உத்தியோகம், கல்வி மேன்மையடையும். காதல் கை கூடும். வீடு, வாகனம், நிலம் வாங்க, விற்க சிறப்பாக இருக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பு மனதிற்கு தெம்பளிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். அவசரம், பதற்றம், அடிக்கடி மனதில் எழும். மலச்சிக்கல் வந்து நீங்கும். பணம் சேரும்.

*ஒக்ரோபர்*: எதையும் துணிந்து செய்யும் நீங்கள், சிறிது பயப்பட வேண்டியிருக்கும். காதல் கசக்கும். எதிர்ப்புக்கள் மறைமுகமர்க இருக்கும். வேண்டாத பயம் மனதை வாட்டும். போட்டி, பொறாமை இவற்றை எதிர்கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவீர்கள். ஆபத்துக்களில் இருந்து தப்பிவிடுவீர்கள். பணம் பலவழிகளில் வரும். மகான்களின் சந்திப்பு, பக்தி, ஞானம், வாழ்க்கையில் உயர்விற்கு வழி காட்டும். குடும்பத்தில் குழப்பம் தோன்றி மறையும். வெளியூர்ப் பயணங்கள் செய்வீர்கள்.

*நவம்பர்*: குழப்பம் காணப்படும். சிறிய விசயத்திற்குப் போய் 'டென்சன்' ஆவீர்கள். எதையும் கடுமையாகப் போராடி ஜெயிப்பீர்கள். எதிர்ப்புகள் தோன்றிமறையும். காதல் கசக்கும். வேண்டாத மனப் பயம் அடிக்கடி வந்து மனதை வாட்டும். திருமணக் காரியம் நடத்த வாய்ப்பு உண்டு. பதவி உயர்வு, தொழில் முன்னேற்றம் ஏற்படும். பணத் தேவை அதிகரிக்கும். நல்ல மனிதர்களின் ஆதரவும் உறுதுணையும் உண்டு. வம்பு, வழக்கு வந்து தப்பிவிடுவீர்கள். பயணத்தில் கவனம் தேவை.

*டிசெம்பர்*: எவ்வளவு பணம் வந்தாலும் செலவு காத்துக்கிடக்கும். பெரிய மனிதர்களின் ஆதரவும் நன்மதிப்பும் உங்கள் தகுதியை உயர்த்தும். காதல் கைகூடும். குடும்பத்தில் ஊடலும் கூடலும் இருக்கும். செய்கின்ற தொழிலில் படிப்படியாக முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தில் அழுத்தம் இருக்கும். வெளியூர், வெளிநாட்டுப் பயணம் சிலருக்கு உண்டு. புதிய தொழில்செய்ய முயற்சிப்பீர்கள். அவ்வப்போது ஞாபக மறதி காணப்படும். சிறுவிபத்து ஏற்பட்டு தப்பிவிடுவீர்கள். சுபகாரியம் நடக்கும். (வளரும்)

# 45ஆயிரம் தென்னங்கன்றுகள் மாத இறுதிக்குள் விநியோகம்

## தென்னை அபிவிருத்திச் சபை

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டப் பயனாளிகளுக்கென மாத இறுதிக்குள் சுமார் 45 ஆயிரம் தென்னங் கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

தென்னை அபிவிருத்திச் சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் எஸ்.சிவச்சந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-


எழுபதாயிரம் தென்னங்கன்றுகளை நடுகை செய்யும் திட்டத்தின் கீழ், கடந்த மாதம் மட்டும் 25 ஆயிரம் கன்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் 17 ஆயிரம் கன்றுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 8 ஆயிரம் கன்றுகளும் இவ்வாறு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தில் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் இருநூறு ஏக்கரிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் நாநூறு ஏக்கரிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு நூறு ஏக்கரிலும் தென்னங்கன்றுகள் நடுகை செய்யப்பட வேண்டும்.

இதற்கென ஐம்பதாயிரம் தென்னம் நாற்றுக்களைக் கொண்ட இரு நாற்று மேடைகள் பத்தமேனியிலும், கிளிநொச்சியிலும் அமைக்கப்பட்டுள்ளன - என்றார் அவர்.

(எ-7)



மூவிலயான்ட்டோ நிறுவனத்தினால் சுழிபுரம் மேற்கு அம்பாள் சனசமூக நிலையத்துக்கு நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று அண்மையில் அன்பளிப்புக்காக வழங்கப்பட்டது.

சனசமூக நிலையத் தலைவர் மு.பழனி, மூவிலயான்ட்டோ நிறுவனத்தின் திட்ட அதிகாரி எஸ்.பாஸ்கரனிடமிருந்து நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். சமுர்த்தி செயலணி செயலாளர் எஸ்.சிவானந்தன், சுழிபுரம் மேற்கு கிராம அலுவலர் எஸ்.வைத்தியநாதன், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எஸ்.தர்மராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: வலி.மேற்குச் செய்தியாளர்)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்


24 மணிநேர பாதையோர உதவி




# CUSTOM CAB

## உங்களுக்குத் தேவையான விதத்தில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!




பல்வகைச் செயற்பாடுகளுக்கான புதிய TATA வாகனத்தைப் பற்றி விசாரியுங்கள். வேகம், சக்தி, எடைகொள்ளல், இடவசதி, ஆகக்கூடிய எரிபொருள் பயன்பாடு அனைத்தையும் கொண்டது. TATA 207 D1 கரடுமுரடான பயன்பாடுகளுக்கென்றே வடிவமைக்கப்பட்டது என்றாலும் கூடுதல் வசதியானது. 5 ஸ்பீட் கியர் பொக்ஸையும், பவர் ஸ்டியரிங்கையும் கொண்ட TATA 207 D1 எந்தவொரு நெடுஞ்சாலையிலும் அதிவேகமாகச் செல்லக்கூடியது.

இன்றே 207 D1 வாகனத்தை ஓட்டிப்பார்த்து விபரங்களைக் கேட்டறியுங்கள். நாடு முழுவதிலும் சேவை நிலையங்கள், 24 மணிநேர பாதையோர உதவிகள், வேலைத்தள வசதிகள் ஆகியவை வருடத்தில் 365 நாட்களிலும் TATA வாகனங்களுக்குக் கிடைக்கின்றன. அத்துடன், எமது கவர்ச்சிகர குத்தகைக் கடன் வசதிகள் பற்றியும் கேட்டறிந்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**TATA 207 DI**

**விலை ரூபா. 650,000/- +VAT**

TATA

டீசல் அன்ட் மோட்டார் எஞ்ஜினியரிங் லிமிடெட், 65 ஜேத்தவன வீதி, கொழும்பு 14. தொலைபேசி: 011 2 449797, 011 4 607468, 011 4 607473 தொலைநகல்: 011 2 449080.
அவசர அழைப்பு: சரத் 0777 326784, டில்ஷான் 0777 397242 மின்னஞ்சல்: dimo@dimolanka.com அநுராதபுரம்: 025 2223025. மாத்தறை: 041 2225450-53. குருநாகல்: 037 2228763. கண்டி: 081 2212735.

dimo

Q & E Advertising


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்விவளவு, இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டியைச் சேர்ந்த

## திருமதி கார்த்திகேசு சின்னமணி

**அன்னையின் மடியில்**
**05.02.1933**

**ஆண்டவன் அடியில்**
**06.12.2003**

சிந்தையில் உம் நினைவு சிதறிக் கிடக்குதம்மா
முந்தை நாள் நினைவுகள் முழுமையாய் நிறையுதம்மா
விந்தையாய் எமைவிட்டுச் சென்ற வேதனை சூழ்ந்திருக்க
எம்தாய் என்றே எழுவரும் பதறி நிற்க
ஏமாற்றிவிட்டு எங்கு சென்றனையோ!

ஈன்றோரைச் சான்றோராக்கி இல்லை என்ற தொல்லை, நீக்கி
இமையாணன் பதிதனிலே
இலக்கணமாய் வாழ்ந்து விட்டு
இமையளவும் எண்ணாது
எங்கே மறைந்தாயோ?
சீர் கொள் சின்னமணியே
சிறிமுருகன் அடிசேர
சித்தம் கலங்கியே
நித்தம் வணங்குகிறோம்.

கார்த்திகேசுத் துணையுடன் கதிர்காம வேலன் அருளுடன்
கலகலப்பான உன்வாழ்வை கலக்கிட நினைத்தானோ கள்வன்
வந்தவரை ஏற்று வகையான உணவூட்டி
சென்று வரவென செழுநல் உபகாரஞ்செய்த
பண்பான உன்வாழ்வை பார்போற்றி நிற்கையிலே - உன்னை
பரமனும் தேவையெனக் கவர்ந்தானோ!

இன்று( 05.01.2004) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செல்விவளவு,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(சி-32480) (25-13-24)

# பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்டத்திற்குட்பட்ட சந்தைகளுக்கான வரி அற வீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளிற் பணிபுரிய விரும்புவோர் தன் வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004.01.12 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத்தேர்விற்கு வருகை தருமாறு வேண்டுகிறோம்.

தகைமைகள்:

01) தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.

02) அகவை: 18-40 வரை இருத்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும்.

நாள்: 2004.01.12

நேரம்: காலை 10.00 மணி

இடம்: 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

✷ குறிப்பு:-

நேர்முகத் தேர்விற்கு ஆவணங்களுடன் வருகைதருதல் வேண்டும்.

**ஆளுநகை,**
**சந்தைப் பகுதி,**
**யாழ். மாவட்டம்.**

(26763) (34-13-16-24)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவைத் தலைவரும் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தருமான

**திருவாளர் க.அருள்லிங்கம்** (சங்கானை மத்தி)

அவர்கள் 29.12.2003 அன்று யாழ். நீதிவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவிப்பிரமாணம் செய்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றேன். அவர் பணி பல்பேறு சிறப்புற சந்நிதி வேலவனை வேண்டுகிறேன்.

**சி.நாகலிங்கம்**
முன்னாள் பேரவைத் தலைவரும்,
"லிங்கம்ஸ்" பந்தல் உரிமையாளரும்.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (26757) (24-13-16)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 04 - 1943



மறைவு 17 - 12 - 2002

அமரர் சுப்பிரமணியம் மகேஸ்வரலிங்கம் *(லிங்கம்)*

(செயலாளர், சூராவத்தை முத்துமாரியம்மன் ஆலய பரிபாலனசபை)

திதி: 05-01-2004 (திரயோதசி)

பண்பையும் அறிவுரைகளையும் எமக்கு
கூறிய அன்பின் தந்தையே!
சகலரையும் பரிதவிக்க விட்டு
மகேஸ்வர லிங்கமாய்
முத்துமாரி அம்மனின் பாதார
விந்தங்களை அடைந்தீரே!
உங்கள் உடல் பிரிந்தாலும்
உள்ளமெல்லாம் என்றும் எங்களிடம்தான்
ஆண்டொன்றில் உங்கள் ஆத்மா
சாந்தியடைய முத்துமாரி அம்பாளை
வேண்டுகின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்,**
**மைத்துனர்கள்.**

சிவன் கோயிலடி,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம். (26671)(34-13-16-24)

எங்கள் இதயத்தெய்வத்தின் நித்திய ஆத்மா சாந்திக்காய்....

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணதனில் மகிழ்வுறவே புன்னகையில் வாழ்ந்த தாயே!
பண்ணிய புண்ணியத்தால் ஊருள்ளம் கவர்ந்த உத்தமியே!
விண்ணிற்கு விரைந்தது ஏன்?- விதியின் பலனதுவோ!
கண்ணுதலான் திருவடியில் தாங்கள் காலமெல்லாம் நின்றே!
நண்ணிய இறையடியிற் சாந்திபெற என்றும் வேண்டுவமே!



நவக்கிரியை பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

**சிவப்பிரகாசம் தங்கம்மா**

தோற்றம் 1921.01.10 மறைவு 2002.12.16

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

உங்கள் நினைவுகளுடன் வாழும் உறவுகள்
செல்வத்துரை பதி,
61, பலாலி வீதி, திருநெல்வேலி.

# தாதி தேவை

எமது வைத்திய நிலையத்திற்கு பெண் தாதி தேவை. விவரங்களுக்கு நேரில் வரவும்.

**முருகானந்தா**
**வைத்திய நிலையம்**
கண்டி வீதி,
மாம்பழம் சந்தி.
**T.P.: 222 7073**

(26762) (24-13-16)

**PHYSICS - ஸ்பெல்மன்**

**PERSONAL CLASSES**
**Physics**
ஆசிரியர்: Mr.ம.ஸ்பெல்மன்

**A/L 06**
ஆரம்பம்: 07.01.2004 5.00 p.m. புதன்

**A/L 04**
**வினாவிடை**
(வெளிமாவட்ட மாணவர்களுக்கு மட்டும்)
ஆரம்பம்: 07.01.2004 6.00 p.m. புதன்
இடம்: இல. 18. மத்தியூஸ் வீதி. யாழ்ப்பாணம்.

**PHYSICS - ஸ்பெல்மன்**

(26658) (24-13-16)

# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 2459

(26161)

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு

# வடக்கு - கிழக்கு மாகாணசபை

*வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்)*

# பதவி வெற்றிடங்கள்

வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்ட முகாமைத்துவ காரியாலயத்திலும், மாவட்ட காரியாலயங்களிலுமுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி மற்றும் வேண்டிய தகவல்களை அடக்கியதாக விண்ணப்பங்களை தயாரித்து 2004.01.19 ஆம் திகதிக்கு முன்பதாக திட்டப்பணிப்பாளர், வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்ட காரியாலயம், 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை எனும் விலாசத்திற்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடிதஉறையில் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

தெரிவு முறை: **நேர்முகப் பரீட்சை மூலம்**

சம்பளம்:

இத்தகைய பதவிகளுக்கு அரசாங்க சேவையில் வழங்கப்படும் சம்பளத்துடன் தெரிவுசெய்யப்படுபவரின் தகைமை, அனுபவம் மற்றும் தேவைகளையும் கவனத்திற்கொண்டு சம்பளத்தின் 50% வீதத்திற்கு மேற்படாத தொகை வழங்கப்படும்.

## கணக்காளர் பதவி II/I

(01 பதவி வெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயத்திலும், 01 பதவிவெற்றிடம் மாவட்ட காரியாலயத்திலும்)

கடமைகள்:

**நிதி முகாமைத்துவத்தை ஸ்தாபிப்பதும் பராமரிப்பதும் உள்ளக நிதி கட்டுப்பாடு திட்டமிடுதல், வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரித்தல், கணக்குகளைச் சரியாக அறிக்கை செய்தலும் கணக்காய்வு செய்தலும் இவைகளைச் சரிவரச் செய்வதற்கேதுவாகத் தேவையான புத்தகங்களைத் தயாரிப்பதும் பராமரிப்பதும்.**

தேவையான கல்வித் தகைமைகளும், அனுபவங்களும்:

- ✦ இலங்கை அல்லது ஐக்கிய இராச்சிய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் நடுநிலை பரீட்சை அல்லது உரிமத்தவர் பரீட்சை அல்லது
- ✦ ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1, பகுதி 2 இல் சித்தி அல்லது
- ✦ ஐக்கிய இராச்சியத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1, பகுதி 2 இல் சித்தி அல்லது
- ✦ இலங்கை உயர்தொழில்நுட்பக் கல்லூரியின் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமாவில் சித்தி அல்லது
- ✦ இலங்கை உயர்தொழிநுட்பக் கல்லூரியின் உயர்தேசிய வர்த்தக டிப்ளோமாவில் சித்தி அல்லது
- ✦ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தில் பட்டதாரி அல்லது
- ✦ ஐக்கிய இராச்சிய செயலாளர்களினதும் நிர்வாகிகளினதும் பட்டய நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி.

## உதவித் திட்டமிடல் பணிப்பாளர் II/I

(மாவட்ட காரியாலயங்களிலுள்ள 08 பதவி வெற்றிடங்கள்)

கடமைகள்:

**சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டங்களையும் உப கருத்திட்டங்களையும் திட்டமிடுதலிலும் செயற்படுத்தலிலும் மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளருக்கு உதவி செய்யவேண்டும். உபகருத்திட்டங்களைச் செவ்வனே செயற்படுத்துவதற்குத் தேவையான தகவல்களைத் திரட்டுதல், முன்னேற்ற அறிக்கை தயாரித்தலும் அத்தோடு கருத்திட்ட யோசனைகளைத் தயாரிப்பதில் மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளருக்கு உதவி செய்யவேண்டும்.**

தேவையான கல்வித் தகைமைகளும், அனுபவங்களும்

- ✦ அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் முதலாந்தர சித்தி அல்லது இரண்டாந்தர சித்தி பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அல்லது
- ✦ அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் பின்படிப்பு பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது
- ✦ அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் பின்படிப்பு பட்டதாரி டிப்ளோமாவை உடையவராக இருத்தல் வேண்டும்.

## கணக்குப் பதியுநர் II/I

(01 பதவிவெற்றிடம் திட்டமுகாமைத்துவ காரியாலயத்திலும், 08 பதவி வெற்றிடங்கள் மாவட்டக் காரியாலயங்களிலும்)

கடமைகள்

**தேவையான ஏடுகளையும் மற்றும் புத்தகங்களையும் பராமரிப்பதற்கும் எல்லா கொடுப்பனவு ஆவணங்களின் பொறுப்பாளராக இருப்பதற்கும் கொடுப்பனவுகளைத் திறமையாகவும் சரிவரவும் செய்வதற்கும் கணக்காளருக்கு உதவியாக இருத்தல் வேண்டும்.**

தேவையான கல்வித் தகைமைகளும், அனுபவங்களும்

**பின்வரும் தகைமைகளில் ஒன்றையாவது கொண்டிருத்தல் வேண்டும்.**

- ✦ சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் (i) சிங்களம், தமிழ் மொழி அல்லது இலக்கியம் (ii) கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அடங்கலாக 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரு அமர்வில் 5 இற்குக் குறையாத பாடங்களுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாத 6 பாடங்களில் சித்தி.
- ✦ க.பொ.த. (சா.த.) பரீட்சையில் (i) சிங்களம், தமிழ்மொழி அல்லது இலக்கியம் (ii) கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அடங்கலாக 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒருஅமர்வில் 5 இற்குக் குறையாத பாடங்களுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாத 6 பாடங்களில் சித்தி.
- ✦ தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் அடங்கலாக நான்கு பாடங்களில் "ஏ" அல்லது "பீ" தரச்சித்தியும் ஏனைய பாடங்களில் "ச" தரச்சித்தியுட்பட ஒரு அமர்வில் 5 இற்குக் குறையாத பாடங்களுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாத 6 பாடங்களில் சித்தி.
- ✦ இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் வர்த்தக சான்றிதழ்.
- ✦ அரசாங்க கனிஷ்ட பல்கலைக்கழகமொன்றில் கணக்குப் பதிதலில் டிப்ளோமாச் சான்றிதழ் கணக்குப் பதிதலை ஒரு பாடமாகக் கொண்ட கணக்குப் பரிசோதனைப் பயிற்சி, ஆகுசெலவு பதிப்பிடல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமாச் சான்றிதழ்.
- ✦ இலண்டன் கணக்குப் பதியுநர் நிறுவக இறுதிப் பரீட்சைச் சான்றிதழ்.
- ✦ இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கீட்டியல் டிப்ளோமா இடைநிலைப் பரீட்சைச் சான்றிதழ்.
- ✦ இலண்டன் பட்டயச் செயலாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சைச் சான்றிதழ்.
- ✦ இலண்டன் ஆகுசெலவு முகாமைக் கணக்காளர் நிறுவனத்தின் பகுதி I பரீட்சைச் சான்றிதழ்.
- ✦ இலண்டன் சான்றுபடுத்திய ஆகுசெலவு கூட்டுக்கணக்காளர் நிறுவனத்தின் பகுதி I பரீட்சைச் சான்றிதழ்.
- ✦ உயர்கல்வி அமைச்சின் கீழ் அடங்கும் தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்பட்ட கணக்குப் பதியுநர்களுக்கான சான்றிதழ் அல்லது உயர் வர்த்தக சான்றிதழ்.
- ✦ இலண்டன் வர்த்தக சபையின் இலங்கைத் திட்டத்தைச் சேர்ந்த வர்த்தக படிப்பு, (சாதாரண வர்த்தகப் பிரிவு) அல்லது உயர்வர்த்தக படிப்பு (சாதாரண வர்த்தகப் பிரிவு) சான்றிதழ்.
- ✦ இலங்கை வர்த்தக சபை மற்றும் கல்வித் திணைக்களம் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட வர்த்தகப் படிப்புச் சான்றிதழ் (சாதாரண வர்த்தகப் பிரிவு, அல்லது உயர்தர வர்த்தகப் படிப்பு (சாதாரண வர்த்தகப் பிரிவு) சான்றிதழ்.
- ✦ இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கீட்டியல் துறையிலான இரண்டுவருட தேசிய சான்றிதழ் கல்வி நெறியில் சித்தியெய்தி இருத்தல்.
- ✦ அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் பின்படிப்பு பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

**த.லங்காநேசன்,**
திட்டப்பணிப்பாளர், நிகொட் திட்டம். (சி-32396)(34-24-13-16)

---

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 540 |
| திகதி | 02.01.2004 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5416532-5431414

வெற்றி இலக்கங்கள் **30 41 42 47**

லக்கினம்

கடகம்




**ஜக்பொட் பரிசு**
**ரூபா. 1,000,000/-**
**வெல்லப்படவில்லை**

**இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,739,200/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 331,013 | 10 | 3,310,130 |
| 2 இலக்கங்கள் | 30,381 | 20 | 607,620 |
| 1 இல + லக்கினம் | 30,072 | 30 | 902,160 |
| 2 இல + லக்கினம் | 2,782 | 100 | 278,200 |
| 3 இலக்கங்கள் | 811 | 500 | 405,500 |
| 3 இல + லக்கினம் | 72 | 5,000 | 360,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 395,135 | - | 6,263,610 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.6,263,610/-

தொடர் இல. 4443640க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2004 ஜனவரி 06ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்


**5428772-1-92**
**5417566-9-91**
**5431358-4-77**
**5420933-8-58**
**5430792-3-46**

(C/32487) PHOENIX O&M

---

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்




**உத்தியோகபூர்வ முடிவுகள்**

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3240321 இருந்து
3257676 வரை
சீட்டிழுப்பு இல. 1467
திகதி 03.01.2004

## வெற்றி எண்கள்

**18 30 47 55 57**

போனஸ் எண் **39**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.3,946,100/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 3,946,100/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 100,000/- | - |
| 4 | 96 | 10,000/- | 960,000/- |
| 3 | 5,545 | 500/- | 2,772,500/- |
| 2 | 91,075 | 20/- | 1,821,500/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 18ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 112,123 | 10/- | 1,121,230/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,675,230/-

**இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்**
**ரூபா.4,813,000/-**

தொடர் இல. 2289004க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2004 ஜனவரி 07ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**3255939-5-90**
**3241589-1-21**
**3247469-9-71**
**3243130-6-40**
**3240920-3-37**

(C/32486) PHOENIX O&M

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் விலை ரூபா 42. Prima பேட்டுக் குஞ்சுகள் விலை ரூபா 62. 05.01.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறை கிளையிலும் விநியோகிக்கப்படும். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர்.

(26356)

பகிரா இன புறோயிலர் குஞ்சுகள் 07.01.2004 மாலை விநியோகிக்கப்படும். விலை குறைக்கப்பட்டுள்ளது. தேவைப்படுவோர் உடன் தொடர்புகொள்ளவும். ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி.

T.P. No.: 3529, 2867 (26711)

## விற்பனைக்கு

பொலிகண்டி சந்திக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும் நாற்சார் வீடும் (உலாந்தா வீடு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.பூரணச்சந்திரன், 15/1, பிள்ளையார் கோவில் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம் T.P. No.: 0777-570215, 0777-570216 (26688)

## தவறிவிட்டது

கரணவாய் கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த ஐயாப்பிள்ளை கருணேஸ்வரியின் தே.அ.அட்டை (இல. 748663533V), பரமேஸ்வரன் விசாலாட்சி அம்மாவின் தேசிய அ.அ.(686890880V) என்பன 01.01.2004 இல் யாழ். பஸ் நிலையப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி, மொடேன் ஸ்ரோஸில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.(26759)

# நாளை நடப்பவை

யாழ்ப்பாணம்,ஜன.5

தென்மராட்சி, வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி தம்பிரான் சுவாமிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு சிவஸ்ரீ இ.குமாரசாமிக்குருக்கள் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-10

★ ★ ★

கோப்பாய்,ஜன.5

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் தருமபுர ஆதீனம் டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் சுவாமிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(எ-10-72)

★ ★ ★

கொழும்புத்துறை,ஜன.5

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் இலவச தையல்பயிற்சி நெறி அங்குரார்ப்பண நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிறுவன நிர்வாகி எஸ்.கமலநாதன் தலைமையில் கச்சாயில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும், சிறப்பு விருந்தினராக நிறுவன ஸ்தாபகர் வ.தியாகேந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(எ-10-74)


# துயர் பகிர்கின்றோம்

எமது ஸ்தாபனத்தின் ஆசிரியர் திருச்சி - நவம் அவர்களின் அன்பு மாமனார்

**அம்பலவாணர் சதாசிவம்**

அவர்கள்

தமது 99ஆவது வயதில் இறைபதம் எய்தியமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

ஐயனார் வீதி,
சுன்னாகம். (26768) (24-18-16)

'டெல்ரா' கல்விச் சேவைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**வீரசிங்கம் நல்லம்மா**

திதி: 05-01-2004

தோற்றம் 30-10-1944 — மறைவு 17-12-2002

ஓராண்டு போனதம்மா! எங்கள்
ஈரவிழிகள் காயவில்லையே!
உனை நினைத்து துடிக்குதெம் நெஞ்சம்!
உன் திருமுகம் காண்பது எப்போது தாயே?
ஏழு ஜென்மங்கள் ஆனாலும்
நீங்களே எம் அம்மாவாக வரவேண்டும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி மத்தி,
மாலை வைரவர். (26609)(26-24-18-16)

# கண்ணீர் அஞ்சலி



எமது தென்இந்தியத் திருச்சபை இன்பச்சோலை திருச்சபை நிலையத்தின் சமூகப் பணிகளில்

அயராது பாடுபட்டுழைத்த எமது இதயத் தந்தை

**J.S. செல்வரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சமூகப்பணி அன்பர்களும்,
மக்களும்,
இன்பச்சோலை.

(சி-32472) (26-24-18-16)

# 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 10 - 1960



உதிர்வு 25 - 12 - 1985

**செல்வி தங்கபூபதி முத்துவேல்**

திதி: திரயோதசி 05-01-2004

எங்கள் குல விளக்கே!
நீ அணைந்தாலும் உன் ஞாபகம்
அணையவில்லையம்மா
உன் சிரித்த முகம் கூட
நினைவில் வந்து போகுதம்மா!
தினம் தினம் கண்ணீர் மழையில்
நனைகின்றோம் நாம்!
ஆண்டுகள் ~ பல சென்றாலும்
உன் நினைவுகள் மாறாதம்மா!

அப்பா, அம்மா, தம்பி,
மைத்துனி, மருமக்கள்,
உற்றார், உறவினர்.

சந்நிதி வீதி,
உடுப்பிட்டி. (26703)(34-24-18-16)

# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

A/L 2004 DAY CLASS

திரிகோண கணிதம்

ஆரம்பம் : 05-01-2004 திங்கள் 12.15

ஆசிரியர்: திரு.எஸ். செந்தில்றாஜ் (B.Sc.)

★ குறிப்பாக வெளிமாவட்ட மாணவர்களுக்கானது.

(26755) (26-24-18-16)

# விற்பனைக்கு

தரமான, திறமான நல்லெண்ணையைப் பெற்றுக்கொள்வதற்குரிய நவீன இயந்திரம் விற்பனைக்கு உண்டு.

Oil Expeller With Double Chamber
Motor - 25 H.P.
R.P.M. - 960
Cap - 180 Kg
(Seeds Per Hour)

தொடர்பு: S.A.பாலச்சந்திரன், T.P.: 021-222 3442

(26742)(34-24-18-16)

# MATHS CENTRE

M.M.V. Road Nelliady

A/L 2006 கலைப்பிரிவு

ஆரம்பம் : 05.01.2004 திங்கள் 2.00 p.m. (ப.நே)

(வழமையான ஆசிரியர் குழு) (C/32475)(22-16-17)

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் மார்கழித் திங்கள் 21 ஆம் நாள்
இன்று (05.01.2004) திங்கட்கிழமை
காலை 10.30 மணிமுதல் 12.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது செல்வப்புதல்வன்
திருவளர் செல்வன்
**திலகராஜ்**
அவர்களுக்கும்



எமது செல்வப்புதல்வி
திருவளர் செல்வி
**சியாமளா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு இந்தியாவிலுள்ள (தமிழ்நாடு) அண்ணாநகர் பழநிமுருகன் கோயில் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நடைபெறுகின்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அத்துடன், புதுமணமக்களுக்கு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் வாழ்த்துக்களை விரும்பும்:

திரு.திருமதி இரத்தினம் மணி,
கைதடி மேற்கு, கைதடி.

திரு.திருமதி சின்னத்துரை தேவி,
கைதடி மத்தி, கைதடி.

(இரு வீட்டார் அழைப்பு)

(26739) (34-24-18-16)

# யாழ் நகரில் ASIAN COMPUTERS வழங்கும் இலவச

# புதுமை கருத்தரங்கு

இந்தியாவிலிருந்து வருகை தரும்
பிரபல விரிவுரையாளர்

வெற்றியை இலக்காக கொண்டு அடுத்த கட்ட முன்னேற்றத்திற்காக காத்திருக்கும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்!

O/L, A/L மாணவர்கள், பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்கள் கணனி மற்றும் தொழில்சார் பயிற்சி பெறும் இளைஞர் யுவதிகள் இக்கருத்தரங்களில் பங்குபற்றி பயனடையலாம்.

| | | |
|---|---|---|
| யாழ் நகரில் | 10-01-2004 சனிக்கிழமை | முற்றிலும் வித்தியாசமான ஒரு கருத்தரங்கு |
| சுன்னாகத்தில் | 10-01-2004 சனிக்கிழமை | |
| நெல்லியடியில் | 11-01-2004 ஞாயிற்றுக்கிழமை | |

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புபவர்கள் கீழ்குறிப்பிட்ட எமது பயிற்சி நிலையங்களில் நேர விபரங்களையும், இலவச அனுமதிகளையும் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

## ASIAN COMPUTER SYSTEMS

| | | |
|---|---|---|
| இல :2 G,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ 021-222 5677 | PRASHANNAA COMPUTERS STUDY CENTRE 108,K.K.S. வீதி, சுன்னாகம். ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 0777-878160 |

# ஆங்கிலப் பாடக் கற்பித்தலை மேம்படுத்துவது அவசியம்

**ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் அதிகமானோர் சித்தியடைவதில்லை. இதுகுறித்து 'லக்பிம' வார இதழில் வெளியான வாசகர் ஒருவரது ஆக்கத்தின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

இறுதியாக நடந்த ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் பெரும் எண்ணிக்கையானோர் 70 சதவீதமானோர் சித்தியடையவில்லை என்று அறிய முடிகிறது. இதற்கு முதலாவது காரணம், சாதாரணதரப் பரீட்சை தேசிய மட்டத்திலான பரீட்சையாகக் கருதப்படபோதும், ஆங்கிலம் கற்பித்தலை தேசியமட்டத்திலான ஒன்றாகக் கருதிச் செயற்படாமையாகும். எனவே, அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள் தேசிய மட்டத்தில் சகல பாடசாலைகளிலும் ஆங்கிலத்தை தரமாகக் கற்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்குப் போதுமான ஆசிரியாகள் நியமிக்கப்பட வேண்டுமென ஒருசிலர் கருதுகின்றனர். ஒரு பாடசாலையில் மேலதிகமாகவுள்ள ஆங்கில ஆசிரியாகள் உடனடியாகத் தேவைப்படும் பாடசாலைகளுக்கு மாற்றப்பட வேண்டும். அதைத் தீமானிப்பதற்கு அரசியல்வாதிகளும் உயர் அதிகாரிகளும் துணிவான, நேரடியான கொள்கைகளைக் கொண்டிருக்கவேண்டும். இன்றுள்ள இந்தப் பின்னடைவான நிலைமைக்கு முதுகெலும்பற்ற தலைவர்களே காரணமாவர்.

**சொற் குவியல்களால் பயனில்லை**

இன்று பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள, பாட விதானங்களுக்கான நூல்கள் வெறும் சொற்குவியல்களாகவே உள்ளன. இவற்றால் பயனிலலை. ஆகவே மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஈடுபாட்டை ஏற்படுத்தக் கூடிய, பயன்பாடு மிக்க நூல்கள் உருவாக்கப்படுவது அவசியமானதாகும். மேலும், சமூகத்தில் அன்றாடம் பிரயோகிக்கப்படக் கூடியதான பொதுவான ஆங்கிலச் சொற்தொடர்களைக் கொண்ட அடிப்படை அறிவைப் புகட்டும் நூல்கள் உருவாக்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். பாடசாலைகளில், ஆசிரியர்கள் முறைப்படி ஆங்கிலம் போதிப்பதைக் கண்டறியும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்படவேண்டும். இன்று இப்பணியில் ஈடுபடும் அதிகாரிகளின் நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை. அந்த அதிகாரிகளால் அவர்களது பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை மேலதிகாரிகள் கண்காணிக்க வேண்டும். உரிய முறையில் கற்பிக்காத ஆசிரியர்களுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும். இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லாவிட்டால் மாணவர்களின் ஆங்கில அறிவுத்தரத்தை உயர்த்த முடியாது.

மேலும் ஆசிரியர்களுக்கு, வெறும் பயிற்சி நெறிகளை நடத்தினால் போதாது. அவர்களுக்கு ஆங்கிலப் பாடப்பயிற்சிப் பட்டறைகள் அதிகம் இடம்பெறவேண்டும்.

கற்பித்தல் என்பது எமது தேசியத்தைக் கட்டியெழுப்பும் முயற்சி என்பதால் அதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களை உயர்ந்தவர்களாகக் கருதி அவர்களைக் கௌரவித்துச் சன்மானம் வழங்கவேண்டும்.




**ஊக்குவிப்பு**

தங்கள் பணியில் அக்கறையில்லாத ஆசிரியர்களும் உள்ளனர். சகல ஆசிரியர்களும் அவ்வாறானவர்கள் அல்ல. ஆதலால், திறமை வாய்ந்த ஆசிரியர்களைக் கௌரவிப்பதன் மூலம் ஏனைய ஆசிரியர்களை ஊக்குவிக்க முடியும்.

ஆங்கிலப்பாடப் புத்தகத்தைக் கொண்டு கற்பிக்க ஆசிரியர்களுக்குத தெரியாதுள்ளது எனத் தேசியக் கல்வி நிறுவனப் பணிப்பாளர் கூறியுள்ளார். பாடப் புத்தகத்தைக் கற்பிக்க ஆசிரியர்களுக்குத் தெரியாது எனில் அதற்கான பொறுப்பை ஆங்கிலப் பிரிவுப் பணிப்பாளரே ஏற்கவேண்டும்.

கல்வியறிவுள்ள ஆசிரியர்களை உருவாக்குவது தேசிய கல்வி நிறுவனத்தின் பணியேயாகும். அந்தப் பணியை மேற்கொள்ளாது ஆசிரியர்களை ஏன் குறைகூற வேண்டும்?

இலகுவாக ஆசிரியர்களை குற்றவாளிகளாக்குவது பாரதூரமான தவறாகும். அறிவு குறைந்த ஆசிரியர்களும் இருக்கக் கூடும். அவர்களை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அனுப்பிப் பயிற்றுவிப்பது தேசிய கல்வி நிறுவனத்தின் பொறுப்பாகும்.

ஆங்கிலப் பாடத்தைப் போதிப்பதற்கு TESL (TEACHING OF ENGLI SH AS A SECOND LANGUAGE), TEFL (TEACHING OF ENGLISH AS A FOREIGN LANGUAGE ) TESOL (TEACHING OF ENGLISH TO THE SPEAKERS OF OTHER LANGUAGES) ஆகிய விஞ்ஞானமுறை அடிப்படைகள் உள்ளன. இந்த அடித்தளத்தில் குறிப்பிடத்தக்க காலவரையறைக்குள் உயர்ந்த ஆங்கிலமொழி அறிவு பெறப்படும்வரை. ஆசிரியர்கள் பயிற்றப்படவேண்டும்.

**அரசியல் நியமனம்**

இவ்வாறன்றி, அரசியல் செல்வாக்கில் நியமனங்களைப் பெற்றுக் கொடுத்து, குறுகிய கால பயிற்சிகள் மூலம் சிறிது பயிற்றுவித்து, ஏதாவது கறபித்தால் போதும் என்றவகையில் வகுப்பறைகளுக்கு ஆங்கில ஆசிரியர்களை அனுப்பிவைப்பதால் மட்டும், எமது பிள்ளைகள் பரீட்சையில் சித்தியடைய முடியாது.

சிறப்பாக கருமமாற்றும் ஆசிரியர்களுக்கு உயர் கல்விக்கான வாய்புக்களைப் வழங்கி குறைபாடுகள் காணப்படும் ஆசிரியர்களை விரிவான பாடநெறிகளைப் பின்பற்றச் செய்து, எப்போதும் புதியவற்றை புகுத்தி ஆசிரியர்களை முன்னேற்றப்பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும். அவ்வாறு செயற்படுவதால் ஆசிரியர்கள் மத்தியில் புதிய சிந்தனைகள் உருவாகி நவீன முறையில் கற்பிக்க முற்படுவார்கள். அத்தகைய பயிற்சிகள் விசேடமாக தகுதி குறைந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படல்வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர்கள் எப்போதுமே ஏனோதானோ என்ற மனப்பான்மையுடனேயே செயற்படுவார்கள். சகல பாடங்களிலும் ஆகக் குறைந்தது பயிற்சி பெற்ற ஓர் ஆங்கில ஆசிரியரையாவது நியமித்து, சரியான கண்காணிப்புடன் மாணவர்களைப் பரீட்சைக்கு தயார்படுத்துவது உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய விடயமாகும். முறைப்படியான, ரசனை மிக்க விடயங்கள் அடங்கிய புத்தகங்கள் அச்சடிக்கப்படுவதும் முக்கியமானதாகும்.

# சிங்கத்தின் குகைக்குள்ளே நின்று துணிந்து போராடிய தமிழ்ப்புலி!

ஜீ.ஜீ.பொன்னம்பலம் உலகப் புகழ்பெற்ற சட்டமேதை. லண்டனிலே பரிஸ்டர் பட்டம் பெற்றவர். தீர்க்க தரிசனம் மிக்க தமிழ்த் தலைவர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிறுவுநராக இருந்த இவர், இயற்கை எய்தும் வரை அக் கட்சியின் தலைவராக விளங்கியவர்.

பெருந்தலைவர் பொன்னம்பலம் மறைவுக்குப் பின்னர், அ..இ.த.காங்கிரஸ் கட்சியின் தலைவராக வழி நடத்தியவர் அவரது மைந்தன் குமார் பொன்னம்பலம்.

இன்று தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் துணைச் செயலாளராக விளங்கு

## குமாரின் நினைவுதினம் இன்று

கின்றவர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மைந்தன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள். கஜேந்திர குமார் பொன்னம்பலம் குடும்பத்தின் மூன்றாந் தலைமுறையைச் சேர்ந்தவர்.

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றிலே மூன்றாவது தலைமுறை கண்ட குடும்பமாக விளங்குவது பொன்னம்பலம் குடும்பமே. இத்தகைய சிறப்பு இலங்கை அரசியல் தலைவர்களின் குடும்பங்களிலே நிகழ்ந்திராத வியப்பான சம்பவமாகும்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களது காலமும், இன்றைய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களது காலமும் போன்றதல்ல மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியல் நடத்திய காலம்.

போர் முன்னெடுப்புக்கள் இல்லாதது முதலாமவர் காலம். போர்நிறுத்த ஒப்பந்தம் செயற்பாட்டில் உள்ளது மூன்றாமவரின் காலம்.

போர் முன்னெடுப்புக்கள் மலிந்த தமிழினத் தலைவர்களுக்கு சிங்கள இனவெறியர்களால் உயிராபத்து நிறைந்த காலம் மாமனிதரின் காலம்.

அச்சம் சூழ்ந்த காலத்திலே சிங்களத்தின் தலையிலே குந்தியிருந்து அரசியல் நடத்தியவர் மாமனிதர். சொல்லொன்று செயலொன்று அன்றி தெளிந்த சிந்தனையுடன் தமிழினத்தின் விடுதலை நோக்கிய பயணத்திற்கு ஊறு செய்யாமல் வலிமை சேர்த்தவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவிக்காக இரண்டாவது தடவை தேர்தல் நடைபெற்றபோது, தமிழர்களின் மான உணர்ச்சியை வெளிக்காட்டும் வகையில் போட்டி இடடவர் குமார் பொன்னம்பலம் ஜனாதிபதி தேர்தலில் ரோகண விஜய வீரவும் போட்டியிட்டார். தேர்தலுக்காக காசுகட்டி வேட்புமனுச் செலுத்திய குமார், ஆதரவாளர்களுடன் வெளிவந்த போது 'தமிழீழம் காண்போம்' என முழக்கமிட்டார். இதனைக் கண்ணுற்று நின்ற ரோகண விஜயவீர, குமாரை அணுகி உங்கள் கொள்கை சரியானதே எனக் கூறிச் சேர்ந்து புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தலிலே முதல் சுற்று எண்ணிக்கையிலேயே வெற்றி பெற வேண்டுமானால் அளிக்கப்படும் மொத்த வாக்குகளில் 50 சதவீதத் திறகு மேலே வாக்குகள் பெறவேண்டும். இலங்கையிலுள்ள தமிழர்கள் அனைவரும் குமார் பொன்னம்பலத்திற்காக வாக்களித்திருந்தால் 50 சதவீதத்திற்கு அதிகமான வாக்குகள் முதல் சுற்றிலேயே ஜே.ஆர். ஜெயவர்த்தனா பெற்றிருக்கமாட்டார். விருப்பு வாக்கின் அடிப்படையில் இரண்டாவது தடவை எண்ணப்படும் போதுதான் ஜெயவர்த்தனாவால் வென்றிருக்கமுடியும். தமிழர்கள் அனைவரும் அத்தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அப்போது வேண்டுகோள் விடுத்திராவிட்டால், தமிழர்களின் வாக்குகள் இன்று எந்தச் சிங்களவராலும் இலகுவில் ஜனாதிபதியாக முடியாது என்பது அப்போது நிருபிக்கப்பட்டிருக்கும்.

குமார் பொன்னம்பலம் ஜனாதிபதியாக வரலாம் என்ற எண்ணத்தில் தேர்தலில் நிற்பதற்கு அரசியல் அரிச்சுவடு தெரியாதவர் அல்லர். தமிழினத்தின் ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதே அவரது நோக்கமாக இருந்தது.


இதனை இன்றுங்கூட - எம்மவர் சிலரால் விளங்கிக் கொள்ள இயலவில்லை என்பதுதான் கவலையான விடயமே.

**கை.க.விசாகரத்தினம்**
**அ.இ.த.கா. செயற்குழு உறுப்பினர்**

ஜனாதிபதி தேர்தல் முடிந்த பின்னா விடுதலைப் புலிகளின் கொள்கைகளை மிகவும் தீவிரமாக இவர் முன்னெடுத்தார். உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்ற தமிழர்களிடையே தமிழீழம் பற்றிய பரப்புரையில் ஈடுபட்டார். சுவிற்ஸர்லாந்துக்குப் போவதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு குமார் பொன்னம்பலம் சென்றபோது அங்கு ஒன்றரை மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டு, புலனாய்வுத்துறையினரால் விசாரிக்கப்பட்டார்.

அவர் எடுத்துச்சென்ற ஆவணங்கள் துருவிச் சோதனையிடப்பட்டு பறிக்க முயற்சித்த போது "எனது உரையின் அச்சிடப்பட்ட குறிப்புக்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டன" (14ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச்சாலைக் காட்சிகள்



மாதகல் சென்.தோமஸ் முன்பள்ளி நிலையத்தில் ஒளிவிழா சமீபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாணவர்கள் வழங்கிய நாடகத்தில் ஒரு காட்சி. (ஒ-95)



வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. அதில் இடம்பெற்ற வினோத உடைப்போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களைப் படத்தில் காணலாம்.

சங்கத் தலைவர் க.அரசரத்தினம் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஒ-135)



உலக உணவு தினத்தை முன்னிட்டு பருத்தித்துறைப் பிரதேச சபையினால் குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கப்பட்டது. அப்போது எடுக்கப்பட்ட படம் இது. சபையின் செயலாளர் அ.து. நடராசாவும் படத்தில் உள்ளார்.

(ஒ-173)



தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொண்ட ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழக் கல்விக்கழக யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் கை.கவியன்பன் மங்கள விளக்கேற்றுகிறார். பாடசாலை அதிபர் திருமதி சு.ஜெயவீரசிங்கம் மற்றும் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம். (ஒ-86)

## பாராட்டி வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்

சங்கானை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் தற்காலிகமாக இயங்கிவந்த சலேசியார் முன்பள்ளிக்கான நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு இப்பகுதியில் உள்ளோர் எவருமே விலைக்குக் கூட காணிதர முன்வராத வேளையில், தனது சொந்தக்காணியில் 1½ பரப்புக் காணியை முன்பள்ளிக் கட்டடம் அமைப்பதற்குத் தந்துதவிய ஓடக்கரை வீதி, சங்கானையைச் சேர்ந்த

### சுப்பன் தனராசா

அவர்களையும் அவரது குடும்பத்தினரையும் பாராட்டி வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.

பெற்றோர், ஆசிரியர் சங்கம்,
சலேசியார் முன்பள்ளி, சங்கானை.

(26787)(34-13-18-25)


## பாரதி பதிப்பகம்
### பதவி வெற்றிடம்

- புத்தகம் கட்டுபவர்கள் (BINDERS)
  ஒருவருட முன் அனுபவமும். நகர எல்லைக்குள் நிரந்தர வதிவிடமும் கொண்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் அல்லது நேரில் வரலாம்.
- இயந்திர அறை உதவியாளர்
  நகர எல்லைக்குள் நிரந்தர வதிவிடமும் ஓரளவு கல்விஅறிவும் உடைய இருபது வயதுக்கு மேற்படாத ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம் அல்லது நேரில் வரவும்.

**BHARATHI PATHIPPAKAM**
Off-Set& Letter Press Printers
430, K.K.S. Road, Jaffna.

(C/32489) (34-25-13-18)


# சிங்கத்தின் குகைக்குள்.....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறி சுவிற்ஸர்லாந்திற்கு தான் போகாதுவிட்டாலும் தயாரிக்கப்பட்ட தமது உரை அங்கு படிக்கப்படும் எனச் சொன்னவர் குமார். அதன் பின்னரே சுவிஸ் பயணம் தொடர அனுமதிக்கப்பட்டார்; சுவிஸ் சென்று உரையாற்றினார். திரும்பிவரும்போது தான் வரும் நாளைக் குறிப்பிட்டு முடிந்தால் கைது செய்யலாம் என்று இலங்கை அரசுக்கு அறிவித்தவர் குமார்.

கொழும்பு நகரிலே அமெரிக்க தூதுவர், தமிழர்களுடைய அரசியல் கட்சிகளையும் அமைப்புக்களையும் அழைத்துப் பேச்சு நடத்திய போது தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்று சிலர் கருத்துக்களை வெளியிட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகள் சரியானதெனவும் அதனால் தாமும் தனது கட்சியினரும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்றோம் என உரத்துக் கூறியவர் குமார். தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழினத்தின் தலைமை என்பதை அன்றே ஏற்றுக்கொண்டு பணியாற்றியவர்; பரப்புரை செய்தவர் குமார்.

குமார் இன்று உயிருடன் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகளைப் போல கழுத்திலே அவர் நச்சுக்குப்பி கட்டவில்லை. ஆனால், கொழும்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்காகவும், சிங்களவர்களால் கொடுமைப்படுத்தப்பட்ட ஏனைய தமிழின இளைஞர்களின் விடுதலைக்காகவும் குரல் கொடுத்தார். இக்கொள்கைகளினால் அவரது உயிர் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டது. சிங்கத்தின் குகையிலே துணிந்து நின்று போராடிய தமிழ்ப் புலி அவர்.

பல்லாயிரம் இளைஞர்களின் உயிர்க் கொடையினால் உரம் பெற்றுள்ள தமிழின விடுதலைப் போராட்டத்தற்கு அனைவரும் ஒற்றுமையாக அணிதிரண்டு மேலும் தொண்டாற்றுவதே குமார் பொன்னம்பலத்தின் கொள்கைக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும். தமிழினத்தின் விடுதலையின் போதுதான் அவரது ஆத்மா சாந்தியடையும். ★

## தொழிலாளர் தேவை

1) உழவு இயந்திர சாரதி
(Tractor Driver)

5 வருட அனுபவமுள்ளவர்கள்
உடன் நேரில் சமுகம் தரவும்.
தகுந்த வேதனம் வழங்கப்படும்.

**யூரோவில்,**
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(26765) (26-13-18-25)






## கண்ணீர் அஞ்சலி



எனது ஆருயிர் நண்பன் திரு. சிவபாலன் அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் சிவானந்தம் வாதவூரன்

(முன்னாள் போர்மன், இரசாயனக் கூட்டுத்தாபனம், பரந்தன்.)


அவர்களின் திடீர் மறைவினையிட்டு நாம் மிகவும் வேதனையும் துக்கமும் அடைகிறோம். இவரது மறைவில் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், எமது கண்ணீர் அஞ்சலியினையும் காணிக்கையாகச் சமர்ப்பித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

THAMPI - LIONAIR
A member of Thampi holdings (Pte) Ltd.

(சி-32483) (25-13-18)

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு

### திதி: 05.01.2004



அமரர் வீரசிங்கம்
சூரியகுமாரன்
(தோற்றம் : 23.12.56)



அமரர் இரத்தினம்
பரராசசிங்கம்
(தோற்றம்: 21.07.42)



அமரர் பரராசசிங்கம்
சந்திராதேவி
(தோற்றம்: 17.11.52)

எம்மையெல்லாம் ஆறாத சோகத்தில் ஆழ்த்திவிட்டு
நொடிப்பொழுதில் மீளாத்துயில் கொண்ட எமது அன்புச் செல்வங்களே...!
உங்களைத் தீ அணைத்துக் கொண்டாலும்
உங்கள் திருவுருவங்களோ தினமும் எம்முள் வளரும்!
உங்கள் ஆத்மசாந்திக்காக நிதமும் பிரார்த்திக்கின்றோம்!



அமரர் பரராசசிங்கம்
தயாளினி
(தோற்றம் : 20.10.72)



அமரர் பரராசசிங்கம்
சுஜாதா
(தோற்றம்: 09.05.76)



அமரர் பரராசசிங்கம்
கஜன்
(தோற்றம்: 15.07.82)

*ஆழ்ந்த துயரத்துடன் நினைவுகூரும்.....*

வீரசிங்கம் குடும்பத்தினர்,
பாலாவோடை, மானிப்பாய்.

மின்னஞ்சல் : saraswathy@sltnet.lk

(சி-32491)(22-18-13 25)

## மரண அறிவித்தல்கள்

### நடராஜா சுந்தரமூர்த்தி

இல.108, கச்சேரி நல்லூரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சுந்தரமூர்த்தி நேற்றுமுன்தினம் (03.01.2004) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா மற்றும் ஜெயலட்சுமி (இந்தியா) அவர்களின் அன்பு மகனும் மனோகரியின் அன்புக் கணவரும் சுரேகா, சக்திவேல் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோகரி, மதிவதனி (இந்தியா), சசிகலா (பிரான்ஸ்), மலர்விழி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சக்திவேல் மற்றும் கமலலிங்கம் (பிரான்ஸ்), நடனேந்திரன் (பிரான்ஸ்), தனஞ்சயன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுரேஸ்குமார் (லண்டன்), சுஜாதா, சுஜிதா, கார்த்திக், கௌதம், நிருபன், நிவிஷிகா, நிர்ஷி, அஸ்வத், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.01.2004) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
ச.மனோகரி
(அக்கா).

(26783) (25-13-18)

### திருமதி பரமகுலசிங்கம் லீலாவதி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரான திருமதி பரமகுலசிங்கம் லீலாவதி அவர்கள் நேற்று (04.01.2004) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் சென்னையில் சிவபதமடைந்தார்.

அன்னார் கெங்காதரன், ஸ்ரீதரன், புலேந்திரன், மனோகரன், ரேவதி, கமலாவதி, புஷ்பவதி, இராஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமகுலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சர்மிலி அவர்களின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.M. *றோட்,*
*சின்னப்பிள்ளையார் கோவிலடி,*
*பருத்தித்துறை.*

தகவல்:
கமலநாதன் கபிலன்

(26795) (25-11-18)

### நடராசா தவக்குமார்

தாவடி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராசா தவக்குமார் அவர்கள் 03.01.2004 இல் காலமானார்.

அன்னார் நடராசா - புனிதவதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் ஜெயகலா (கனடா) அவர்களின் அன்புக் கணவரும் வைத்திலிங்கம் - கதிர்காமநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆனந்தகுமார் (பிரான்ஸ்), செல்வகுமார், ஜெயக்குமார், திருமதி விஜிதராசா - கலையரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும் விஜிதராசா (சுவிஸ்) அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (05.01.2004) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு தாவடி இந்துமயானத்துக்கு எடுதது்ச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடிப் பிள்ளையார் கோயிலடி,
தாவடி, கொக்குவில்.

தகவல்:
த.நடராசா *(தந்தை)*
த.திருநாவுக்கரசு *(சிறியதாய்).*

(26792) (26-11-18-25)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

குருநகர்,ஜன.5

புதிய ஆண்டின் முதலாம் தவணைக்காக அரச பாடசாலைகள் யாவும் இன்று திங்கட்கிழமை திறக்கப்படுகின்றன. யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியும் இன்று ஆரம்பமாகவுள்ளது. ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி அங்கு நடைபெற்றுவந்தபோதிலும், நேற்றுடன் இப்பணி நிறைவுபெற்றுள்ளது. (ஐ-51)

## கண்ணீர் அஞ்சலி



வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஆஸ்தான வித்துவான் தவில் மேதை

**காமாட்சி சுந்தரம் குகாநந்தன்** (குகன்)

அவர்கள் எமது தேவஸ்தானத்தில் 40 ஆண்டுகள் சேவையாற்றி சுவர்க்க வாயிலேகாதசி தினத்தில் வைகுண்டம் எய்தி பகவானை அடைந்துள்ளார்.

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காக பகவானை வேண்டிப் பணிகின்றோம்.

-ஆதின மகாசபை.

*பெருமாள் கோயில், யாழ்ப்பாணம்.* (26793)(32-12-17)

## இறுதி அஞ்சலி

மலர்வு 04 07 1980



உதிர்வு 03 01 2004

03-01-2004 அன்று தென்னாபிரிக்காவில் காலமான எம் குலக்கொழுந்து செல்வன்

**இராசையா ராஜ்குமார்**

*(கல்லூரி வீதி, ஓடக்கரை, பருத்தித்துறை)*

அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (05-01-2004) திங்கட்கிழமை தென்னாபிரிக்காவில் நடைபெறும் அதே வேளை, பருத்தித்துறை, கல்லூரி வீதியிலுள்ள அன்னாரது இல்லத்திலும் இறுதி அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்:

*கல்லூரி வீதி, ஓடக்கரை, பருத்தித்துறை.* (26797) (32-12-17) -குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## பண்டிதை தேவகியம்மாள் நீலகண்டன்

*(ஆசிரியை, கொழும்பு விவேகானந்தா வித்தியாலயம், உடுவில் மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி)*

உடுப்பிட்டி, இமையாணனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு, 351/7, A 2, காலி வீதி, வெள்ளவத்தையைப் பிற்கால வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான பண்டிதை தேவகியம்மாள் நீலகண்டன் அவர்கள் 02.01.2004 வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதி-கமலமுத்து தம்பதிகளின் மூன்றாவது புத்திரியும் காங்கேசு நீலகண்டன் ஆசிரியர் அவர்களின் அன்பு மனைவியும திருமதி செல்வநேசன் சிவாம்பிகை (தாரிணி), நித்தியானந்தன் ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆறுமுகம் செல்வநேசன் அவர்களின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன், உடுப்பிட்டி.* (26794) (17-12-32) தகவல்: கா.நீலகண்டன் (கணவர்).

## திருமதி மேரி லூர்தம்மா யேசுதாசன்

சில்லாலையைப் பிறப்படமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி லூர்தம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் யேசுதாசன் (முத்துராசா-அச்சுவேலி பல நோ.கூ.சங்க முன்னாள் கிளை முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் மேரி லீலியாறூபி (ஹொலண்ட்), கொட்விறி ஜீவன், அன்ரன் யூட் ஆகியோரின் அருமைத் தாயாரும், ஜஸ்ரின் (ஹொலண்ட்), றொய்சி, லதா ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற யேசுதாசன், பற்றீமா பேணடேட் ஆகியோரின் சகோதரியும், அன்ரோ, ஜோய், மிரோன், டெவினா, லக்ஷி, கனிசியஸ் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (05-01-2004) திங்கட்கிழமை முற்பகல் 9மணிக்கு புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலியைத் தொடர்ந்து நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*சிற்றம்பலபுரம், சங்கானை வீதி, அச்சுவேலி.* (26804)(32-12-17) தகவல்: - ஜீவன் (மகன்).

# தென்னாபிரிக்காவில் பருத்தித்துறை வாசி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன.5

பருத்தித்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தென்னாபிரிக்காவில் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த இராசையா ராஜ்குமார் (வயது 24) என்ற இளைஞனே நேற்றுமுன் தினம் காலை தென்னாபிரிக்காவில் உயிரிழந்தவராவார்.

ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் புறப்பட்ட இவர் நேரடியாக அங்கு செல்ல முடியாத நிலையில் தென்னாபிரிக்காவில் தங்கியிருந்த வேளையே இம் மரணம் சம்பவித்தது.

மூன்று நாள்கள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த பின் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இவர் அங்கு உயிரிழந்தார். (ஐ-15)

## பாடசாலை வருடாந்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜன.5

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் வருடாந்த ஒன்றுகூடல் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் இ.கைலாயநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி கலந்து கொள்வார்.

கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் இந்த வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் ஜெ.ஜெயககுமார் கேட்டுள்ளார். (ஐ-5)

CHEMISTRY CENTRE
Temple Rd., நல்லூர்.
INORGANIC CHEMISTRY
MON. 2.45-3.45 & FRI. 3-4
BY: அன்பழகன்
A/L 2006
நேரஅட்டவணை நிறுவனத்தில் பெறலாம்
(சி-42997)

புவியியல்,சமூகக்கல்வி பாட ஆசிரியர்கள், மாணவர்களுக்கான
கலங்கரை
தேசப்பட வழிகாட்டி (பகுதி-1)
ஆக்கம்:-K. கிரிதரன்
B.A.(HONS) GEO.SPL.
அனைத்து புத்தகசாலைகளிலும்
வெளியீடு - திகழ் பதிப்பகம் இணுவில்.
(26782)

நாகம்ஸ் சுன்னாகம்



இன்று முதல் ஷாம் அருண்குமார், குட்டி ராதிகா, செந்தில் நடித்த
இயற்கை (ரீகல்)
தினசரி காட்சி : 11.00, 3.00. (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7 மணி
(C-31620)(32)

நிரஞ்சனாஸ் சாவகச்சேரி
சூர்யா, ஜோதிகா நடித்த
காக்க காக்க (ரீகல்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி சனி ஞாயிறு
KEOMA
இரவு 8.45 இற்கு (பி.நே.)
(C-32370) (12)

ராஜா யாழ்ப்பாணம்



இளைய தளபதி விஜய், ஜோதிகா நடித்த
திருமலை (ரீகல்)
காட்சிகள் 10.30,2.30,6.30,9.30 (பி.நே.)
8ஆம் திகதிவரைக்கும்
(சி 32369) (32)

லஷ்சுமி சினிமா இணுவில்
ரஜனி, மீனா, செந்தில், மற்றும் பலர் நடித்த
வீரா (ரீகல்)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பி.நே.)
(26623)(32)

லிபேட்டி அச்சுவேலி
சிலம்பரசன், ராஜேந்தர், சர்மி நடித்த
காதல் அழிவதில்லை (ரீகல்)
தினசரி : 3.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 3.00,7.00 (பி.நே.)
(C-32371) (32)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 09 1933



மறைவு 17 12 2002

**அமரர் செல்லத்துரை பாலசிங்கம்**

(புறக்கோட்டை பிரபல வர்த்தகர்)

M.B. சுவாம்பிள்ளை அன்கோ உரிமையாளர்!

ஆண்டு ஒன்று மறைந்தாலும் உங்கள் நினைவு மறையவே மறையாது!

*சிவகுமார் சிவா, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி.*

தர்மகுலசிங்கம் ஸ்ரீ, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(26802)(32-12-17)

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் நட்புக்கும் மதிப்புக்குமுரிய தையிட்டி வடக்கு

**வேலாயுதம் மகேந்திரன்**



அவர்களின் திடீர் மறைவு எமக்கு அதிர்ச்சியையும் மிகுந்த மனவேதனையையும் அளிக்கின்றது. அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

*அம்பிகை களஞ்சியம், யாழ்ப்பாணம்.* (26790)(32-12-17) உரிமையாளர், சக ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதம் மகேந்திரன்

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், கோகில வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம் மகேந்திரன் நேற்று (04.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற, வேலாயுதம் மற்றும் தங்கம்பிள்ளை தம்பதியினரின் மூத்தமகனும், இரசேஸ்வரியின் அன்புக் கணவரும், உஷாதேவி, புலேந்திரன் (குணம்), கேதீஸ்வரன் ஆகியோரின் சகோதரனும், சர்மிலி, சதீஸ்குமார், பிரகதீஸ், மைதிலி, மயூரன், பிரகாஸ் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், புலேந்திரராசாவின் மைத்துனரும் சிவகௌரி, கஜேந்தினி ஆகியோரின் மைத்துனரும் குருநாதபிள்ளையின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2004) திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*கோகில வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.* (26807)(32-12-17) தகவல்: மனைவி, மக்கள்.

## திருமதி சீதேவிப்பிள்ளை இரத்தினசபாபதி

அல்லாரை தெற்கு, மீசாலையைச் சேர்ந்த திருமதி சீதேவிப்பிள்ளை இரத்தினசபாபதி 02.01.2004 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2004) திங்கட்கிழமை அல்லாரை தெற்கு, மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொய்புல இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.01.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது.

*அல்லாரை தெற்கு, மீசாலை.* (சி-32496) (17-12-32) தகவல்: த.இரத்தினசபாபதி (கணவர்).

## விசேந்தி பிலிப்பையா

குளமங்கால், மல்லாகத்தைச்சேர்ந்த விசேந்தி பிலிப்பையா அவர்கள் நேற்று (04-01-2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரி பற்றிமாவின் அன்புக் கணவரும பிறிண்டா, கொண்சலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலாவின் அன்பு மாமாவும் அனற்மீராவின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2004) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளமங்கால், மல்லாகம்.* (26800) (17-12-32) தகவல்: அல்பிரட் (தயாளன்) மருமகன்.

## சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை நீக்கிலஸ்

(EX-SALES REP.M/S MAHARAJAH ORGANAIZATION)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இல.78, கோவில் வீதியில் வசித்தவரும் நாரந்தனை சம்பேதுருசம்பாவிலு ஆலய முன்னாள் நிர்வாகப் பொறுப்பாளருமாகிய சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை நீக்கிலஸ் 03.01.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஒழுங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*78.கோவில் வீதி, யாழ்ப்பாணம்.* (26796) (17-12-32) தகவல்: பீற்றர் இம்மானுவல். (மருமகன்)

## மிதிவெடியில் சிக்கியவர் பாதம் இழந்தார்!

மாடுகட்டுவதற்காகச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர், மிதிவெடியில் அகப்பட்டு தனது இடதுகால் பாதத்தை இழந்தார்.

நேற்று மாலை கோப்பாய் பழம் வீதிப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வசாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து ப்பகுதியில் வசிக்கும் தெய்வேந்திரம் செல்வம் (வயது56) என்ற குடும்பஸ்தரே இடது பாதத்தை இழந்தவராவார். இவரது வலது காலும் காயங் களுக்கு உள்ளானது. காயமடைந்தவர், யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஐ-9)

## கோழிகளுக்கு அம்மை நோய்

தென்மராட்சி பிரதேசத்தில கோழிக் குஞ்சுகளுக்கு அம்மை நோய் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க உசன் கிளையின் ஏற்பாட்டில் கடந்த வாரம் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலக உத்தியோகத்தர்கள உசன் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடமாடும் சிகிச்சை நிலையத்தினை நடத்தினர். உசன் விடத்தற்பளை, கரம்பகம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த கோழி வளர்ப்போர் தமது கோழிகளுக்கு அங்கு அம்மை நோய் தடுப்பு மருந்தினை பெற்றுக்கொண்டனர் என்று சங்க கிளைக்குழுத் தலைவர் சி.தேவகுமார் தெரிவித்தார். (ஐ-117)

## இளைஞர் படுகாயம்!

கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் இளைஞர் ஒருவர வாள் வெட்டுக்கு இலக்காகித் தலையில் படுகாயமடைந்தார். வண்ணார் பண்ணை பூநாறி மரத்தடியைச் சேர்ந்த சின்னத்தம்பி சண்முகராசா (வயது30) என்பவரே படு காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## நினைவு முத்திரை வெளியிட ஏற்பாடு

தென்மராட்சி,ஜன.5

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் நூற்றாண்டையொட்டி முத்திரை வெளியிடப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி மேற்கொண்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## திருவடிநிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுமார் ஒரு மணிநேரம் முன்பாக பிரஸ்தாப மாணவன் கடலில் இறங்கி குளித்துக்கொண்டிருந்தான் என்று கூறப்படுகிறது. அப்போது கடலில் திடீரென எழுந்த அலை அந்த மாணவனை அடித்துச்சென்றது என்றும் -

கடலில் உயிருக்காகத் தத்தளித்துக் கொண்டிருந்த மாணவனை கரையில் நின்றிருந்த பலரும் கண்ட போதும் கடும் கொந்தளிப்பு காரணமாக அவனை மீட்கமுடியாமற்போனது எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மாணவனான முத்துலிங்கம் காந்தரூபன் (வயது 19)என்பவரே கடலில் காணாமற்போயுள்ளார்.

காணாமற்போன மாணவனைத் தேடும் முயற்சியில் மீனவர்களும், கடற்படையினரும் நேற்று மாலை இருள் பரவும் வேளைவரை ஈடுபட்டிருந்தனர். எனினும், மாணவனின் சடலம் மீட்கப்படவில்லை.

கடலில் சடலத்தைத் தேடும் பணி இன்று காலை மீண்டும் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

பொன்னாலை வரதராஜப்பெருமாள் தீர்த்த உற்சவம் நேற்று வழமை போல இடம்பெற்றது. (ஐ-ரி)

## சமாதான முய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடிப்படை விடயங்களுக்குத் தீர்வு காண நாம் முயற்சிக்கின்றோம்.

இரு பிரதான அரசியல் கட்சிகளால அரசுக்குள் சகவாழ்வு வாழத் தேவைப்படும் சிக்கலான சமபலத்தினால் நிலைமை மேலும் மோசமடைந்திருக்கின்றது. கருத்து, அரசுப் பாணி ஆகிய முரண்பாடுகளுக்கு மத்தியிலும் தகராறுக்கு சமாதானத் தீர்வுகாணும் முயற்சியில் முன்னேறிச்செல்ல நாம் உறுதிபூண்டிருக்கின்றோம் என்று நான நம்புகின்றேன். அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் இரண்டு ஆண்டுகளாக நீடிக்கின்றது.

- இவ்வாறு அவர் கூறினார்.

தெற்காசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (சப்டா) பூர்த்தியடைந்திருப்பது பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒரு சரித்திரபூர்வ நடவடிக்கை என்று உரையில் வர்ணித்த ஜனாதிபதி, உலக வர்த்தக நிகழ்ச்சி நிரலை மீள் பேரப்பேச்சுக்கு உட்படுத்துவது குறித்து கவனம் செலுத்தவேண்டும் எனவும் பிரேரித்திருக்கின்றார். (ஐ-9)

## இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பருடன் பேச்சு நடத்துவதற்காகவே அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சென்றுள்ளார்.

நீதி மன்றத்தின் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகிருக்கும் இந்திய மீனவர்களை விடுவிப்பது, சட்டமா அதிபரின் கைகளிலேயே இருப்பதாக யாழ்.பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் அவரிடம் தெரிவித்தனர். இதனை அடுத்தே அவர் சட்ட உதவியாளருடன் கொழும்புக்குச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## தமிழ் காங்கிரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காரணத்தால் கட்சியின் தலைமைப பதவியை மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வராகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் வழங்குமாறு விநாயகமூர்த்தி பொதுச்சபையிடம் கோரினார். ஆனால், அக்கோரிக்கையை பொதுச்சபை ஏற்கவில்லை. தலைமைப் பதவியை ஏற்க கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் மறுப்புத் தெரிவித்தார். இதனால், கட்சித் தலைவராக தொடர்ந்தும் விநாயகமூர்த்தியையே பொதுச் சபை உறுதிசெயதது.

நேற்றைய தெரிவுகளின்படி கட்சியின் புதிய நிர்வாகிகள் வருமாறு:-

★ *தலைவர்:* அ.விநாயகமூர்த்தி எம்.பி.
★ *சிரேஷ்ட உபதலைவர்:* என்.குமரகுருபரன்.
★ *உபதலைவர்கள்:* சி.வீ.கே.சிவஞானம், ரி.மகேந்திரராஜா, ரி.கே. செந்தில்நாதன், சதா சண்முகநாதன், பொ.மதுரநாயகம், வி.இரத்தினராஜா.
★ *பொதுச்செயலாளர்:* கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.
★ *துணைப் பொதுச் செயலாளர்:* ரி.ஈ. ஆனந்தராஜா.
★ *நிர்வாகச் செயலாளர்:* க.தங்கராஜசிங்கம்.
★ *பிரசாரச் செயலாளர்:* எஸ்.இளங்கோ.
★ *பொருளாளர்:* கே.எம்.தர்மராசா.
★ *துணைப் பொருளாளர்:* சி.கிருஷ்ணகுமார்.

பதினைந்துபேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

வே.க.சந்திரகுமார், ஜெ.ஜெயக்குமார், ரி.மரியரத்தினம், ஆ.செல்லத்துரை, எஸ்.ஆர்.வி.எம்.கதிர்காமமுதலியார், வின்சன்ற் டி போல், ஆர்.கணேசராசா, கே.கோடீஸ்வரன், எஸ்.மரியாமபிள்ளை, வி.இராஜ்குமார், எஸ்.சிவராசா, எஸ்.சுப்பிரமணியம், சீ.கே.விசாகரட்ணம், அ.குமாரவேல், கே.பி.குகதாஸ்.

கட்சியின் புதிய பொதுச் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்குக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உருவப்படம் ஒன்றை அன்பளிப்புச் செய்தார். (ஐ-5-7-51)

## நல்லிணக்க ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மூன்று அமைச்சுக்கள் தொடர்பாக வழங்கிய வாக்குறுதிகளை மீறிவிட்டார். தொடர்ந்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதால் எதுவித பயனும ஏற்படப்போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.


College of Information System
200 (500), Kasthuriyar Road, Jaffna.
யாழ்நகரில் தனித்துவமான ஒரு கணனி நிறுவனம்
புதிய பிரிவுகள் 05-01-2004 இல் ஆரம்பம்
JAVA
CERTIFICATE IN HARDWARE ENGINEERING
VISUAL BASIC
AUTOCAD
C & C++
DESKTOP PUBLISHING
Certificate in MS Office. Certificate in Desktop Publishing, Kiddies Computer Diploma in Computer Studies
CIS
INDIVIDUAL & GROUP CLASSES
UNLIMITED PRACTICAL HOURS
Speed & Intelligent Solution

ஆசிரியர் போட்டிப் பரீட்சை
பயிற்சி வகுப்புக்கள்
இன்று மாலை 4 மணி
திங்கள், புதன், வெள்ளி - 4 மணி.
(26781) (36-12-17) (ப.நே)
நியூட்டன்
ஆரியகுளம் சந்தியருகில், யாழ்நகர்.

Lingam Master - Swiss
சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - Swiss. (26642) (36)

ஆசிரியர் போட்டிப் பரீட்சை
த. தவசேகர் B.Sc.
ஆரம்பம்:செவ்வாய்
(06.01.2004) 4.00 மணி
(சி-32499) (36)
SUBRA சித்தங்கேணி.

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
கணக்கீடு
A/L 2004
கிரயக் கணக்கு
S.சயந்தன்
ஆரம்பம்:07.01.2004 புதன்
(சி-32447)(36) (10.30 மு.நே.)

பிரத்தியேக கணக்கீடு
லக்கி கல்வி நிலையம், அளவெட்டி
இன்றே ஆரம்பம்....
A/L 2005
பங்குடைமை
ஆசிரியர்:திரு.வின்சன்
(B.B.A. HRM Spl.)
திங்கள், புதன் - 3 மணி.

CHEMISTRY GROUP
துரித வினாத்தாள் ரீதியான மீட்டல் வினாவிடை
ஆரம்பம்:05.01.2004
★ Mon. ★ Wed. ★ Fri. 3 - 4.30 மணி (புதிய நேரம்)
By: N.VAKEESAN
466/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(Hallo Trust நிறுவனம் முன்பான ஒழுங்கை, கைலாசபிள்ளையார் கோவிலடி)
(26734)(12)

விக்கி (B.Com.)
பிரத்தியேக வகுப்புகள்
(வீட்டில் வந்தும் கற்பிக்கப்படும்)
★ A/L 2006 வர்த்தக வகுப்புகள்
★ O/L வர்த்தகமும் நிதியும்
★ 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்
தொடர்புகளுக்கு:
ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு.
T.P. No.: 077 -6218306.

சுருட்டுப் பிரியர்களுக்கான அறிவித்தல்
V.K.கனகலிங்கம் சுருட்டு ஸ்தாபனத்தினர் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி மீண்டும் பழைய இடத்தில் உற்பத்தியை ஆரம்பித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். வியாபாரிகள் சலுகை அடிப்படையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். கூல்பார்
இல.446, ஆஸ்பத்திரி வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம்.
சிறீராம்
இல.7, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(26662)(22-13-16)

Computer Courses
DIPLOMA IN MICROSOFT OFFICE XP
Full Syllabus Covered Duration:5 months
Introduction to Computer
Ms Word 2000 /XP
Ms Excel 2000 /Xp
Ms Access 2000 /XP
MS Power point 2000 /XP
MS Outlook 2000 /XP
Special Offer Rs.1500/=
CERTIFICATE COURSES
MS Word 2000 /XP
MS Excel 2000 /XP
MS Access 2000 /XP
Page maker 7
Auto Cad 2000i
(Each 3 months)
Visual Basic 6.0
Corel Draw 11
Pascal
Dbase III+
Java
C/C++
(Each 4 months)
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
Full Syllabus Covered Duration : 8 months
Introduction to Computer
Programming Techniques
MS Word 2000 /XP
MS Access 2000 /XP
Windows XP
Visual Basic 6.0
C/C++
HTML Programming
Sad
E-Mail & Internet
Special Offer Rs.3000/=
Note:-
இப்பிரிவுக்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.
பயிற்சிகள் ஆரம்பம்: 11.01.2004 9 am
25 ANNIVERSARY
JAFFNA TECHNICAL INSTITUTE
No.07, Palaly Road, Jaffna.
e-mail jti@sltnet.lk T.P:0777292127

ஐடியல் அக்கடமி
சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய்.
A/L 2006 கலை , வர்த்தகம்
ஆரம்பம்: 05-01-2004, திங்கள்மாலை 4 மணி
கலைப்பிரிவு
தமிழ்: மாவை V.M. லிங்கம்
இ.நாகரிகம்: T. ஸ்ரீஸ்
அளவையியல்: E.S. பவன்
நாடக அரங்கியல்: P. கணேஷ்
புவியியல்: N. சங்கர்
அரசியல்: T. ஸ்ரீரங்கநாதன்
வர்த்தகப்பிரிவு
கணக்கீடு : V.S.T. குமரன்
பொருளியல் : S. ஜெயக்குமார்
வணிக்கல்வி : N. உமாகாந்த்
பிரத்தியேகவகுப்பு: இரசாயனவியல்
ஆசிரியர்: A.தபேசன்
A/L 2005 - சனி, ஞாயிறு - 5.00 P.M.
A/L 2006 - சனி, ஞாயிறு - 4.00 P.M.
(26733)(12-17) -V.N. பத்மநாதன்- நிர்வாகி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.